விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 16 ஜுல்கஃ 25 இதழ் 203

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-9-1986

## வசாவிளான் சந்தியில்

# நீண்டநேர நேரடி மோதல்

# ஒருவர் பலி; பலர்காயம்

[நமதுநிருபர்]

வசாவிளான் சந்தியருகே போராளிகளுக்கும். இராணுவத்தினருக்குமிடையேஒருமுழு நாள் நேரடிமோதல் இடம் பெற்றது. இம மோதலின் போது யாழ்.நகரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் சுமார் 4 லட்சம்ரூபா பெறுமதியான பொருட்களுடன்சென்ற லொறியை நோக்கி இராணுத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில், அந்த லொறியில் இருந்த 'பில்கிளார்க்' தலைசிதறிய நிலையில் லொறிக்குள்விழுந்து பலியானுர். கிளீனர் படுகாயமுற்றுர். மற்றும் சாரதிஉட்பட மூவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

வசாவிளான் சந்திக்கண்மையில் நேற்று பிற்பகல் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

யாழ் நகரிலுள்ள வர்த்தகர் எஸ். வி. முருகேசுவுக்குச் சொந்தமான லொறி (41 ஸ்ரீ 1996) யில் லட்சக்கணக்கான பெறுமதியுள்ள பால் மா உணவுப்பொருட்களை நேற்று காலை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு சென்றது.

அதில் லொறியின் சாரதி

[11-ம் பக்கம் பார்க்க]

## பெண்கள், குழந்தைகள் உட்பட

# திருமலையில் ஏழு பேர்கொண்ட

# தமிழ் குடும்பம் படுகொலை!

(நமது நிருபர்)

**திருகோணமலைப் பகுதியில் குழந்தைகள், பெண்கள் உட்பட ஏழுபேர் கொண்ட தமிழ்க்குடும்பமொன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. சுட்டுக்கொல்லப்பட்ட இடத்திலேயே அந்த ஏழுபேரின்சடலங்களும் கொளுத்தப்பட்டன.**

இக் கோரக் கொலைச் சம்பவம் திருமலை மாவட்டத்திலுள்ள கன்னியாவில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கன்னியாவில் திருமலை அநுராதபுரம் பிரதான வீதிச்சந்தியில் வசிக்கும் இந்த ஏழுபேர் கொண்ட குடும்பத்தை இராணுவ தினர் கைது செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்துசுட்டுக்கொல்லப்பட்ட இந்த ஏழுபேரினதும் சடலங்கள் தீ மூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் கன்னியாயில் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவததினர் ரோந்து சென்ற கவசவாகனங்களில் ஒன்று முற்றுகச் சேதமடைந்ததுடன் அதில் சென்ற இராணுவத்தினரும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்தே அத் தமிழ்க் குடும்பம் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [யா]

## அடுத்த சுற்றுப் பேச்சுக்கள்:

# சகல அரசியல்கட்சிகளுக்கும் அழைப்பு?

கொழும்பு, ஞாயிறு

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் நடத்தப்படவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் அழைக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

[11-ம் பக்கம் பார்க்க]

## தனியார் பஸ்களில் வந்த

# அதிரடிப்படையினரால் மட்டு இளைஞர்கள் பலர் கைது!

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பிலுள்ள சில வட்டாரங்களில் வீதிக்கு வீதி, படலைக்குப் படலை திடீரென தரித்து நின்ற தனியார் பஸ் வண்டிகளில் வாலிபர்களை துப்பாக்கி முனையில் ஏற்றிச் சென்ற சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தனியார் பஸ் வண்டிகளில் வந்து வாலிபர்களை கொண்டுசென்றவர்கள் பொலிஸ் அதிரடிப்படையினர் எனத் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாமாங்கம், கல்லடி, உப்போடை, நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந் தொடுவாய், ஆரையம்பதி, ஆகிய இடங்களிலேயே 100 க்கு மேற்பட்ட வாலிபர்கள் இவ்விதமாக அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்

மினிசினிமாத் தியேட்டர்களில் படம் பார்த்தவர்களும் வீட்டுத்தோட்டங்களில் வேலை செய்தவர்களும், திண்ணைப் புறங்களில் படுத்திருந்தவர்களுமே அதிரடிப்படையினரின் இந்த திடீர் நடவடிக்கைக் கிலக்கானுர்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்லடி அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு முகமூடிகளின் முன்னிலையில் நிறுத்தப்பட்டனரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது (மா)

## பூஸாவிலிருந்து 100 இளைஞர்கள் விடுதலை

மூதூர், ஞாயிறு

திருமலையைச் சேர்ந்த நூறு இளைஞர்கள் பூஸா முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டு திருமலைக்கு கப் லில் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பொறுப்பேற்ற திருமலை பிரஜைகள் குழுவினர் இவர்களின் சொந்த இடங்களுக்குஇவர்களை அனுப்பிவைத்தனர். (எ-ஒ)

## கொழும்பு

# பயண முகவர் நிலையங்களில் உளவாளிகள்?

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்பிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களில் வடபகுதி இளைஞர்களை தந்திரமாகக் கைது செய்து இராணுவ முகாம்களுக்கு கொண்டுசெல்ல உளவுப் படையைச் சேர்ந்தோர் முயன்று வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது

கொழும்பிலுள்ள வெளிநாட்டு மற்றும் முகவர் நிலையங்களில் வெளிநாடுசெல்ல பணத்தைச் செலுத்தி விட்டுக் காத்துக்கிடக்கும் வடபகுதி இளைஞர்களை அணுகும் இந்த உளவாளிகள் சுலபமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுபபிவைப்பதாகக் கூறி சில பத்திரங்களையும் காண்பித்து அவர்களை நம்ப வைத்து தம்வசமாக்குகின்ற

[11ம் பக்கம் பார்க்க]

## வடமராட்சி இளைஞர் கைது:

# சட்டமா அதிபர் அறிக்கை உடன் பெறப் பணிப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வடமராட்சிப் பகுதி இளைஞர்கள் இருவர் பற்றிய சட்டமா அதிபரின் அறிக்கையை உடனடியாகப் பெறுமாறு கோட்டையில் நீதவான் இரகசியப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த நவரத்தினவேல் உமாபதி, கரவெட்டியைச் சேர்ந்த செல்

(11ம் பக்கம் பார்க்க)

**கமல்ஸ் சேவிஸ்**

நாங்கள் உங்களை டென்மார்க் நாட்டிற்கு காவிச் செல்கிறேம் இது பூச்சாண்டி அல்ல.
கமல்ஸ் சேவிஸ் தரும் ஓர் அரிய வாய்ப்பு.
டென்மார்க் செல்வோர்க்கு சொகுசான பயண வாய்ப்புடன் எமது முகவர்கள் உங்களை கொழும்பில் இருந்து நேரடியாக அழைத்துச்செல்வர்.
இது நாம் தரும் உத்தரவாதம்.
கமல்ஸ் சேவிஸ் வழங்கும் இதர சேவைகளை மறந்துவிடாதீர்கள்.
இதோ மீண்டும் உங்கள் நினைவிற்கு
உலகநாடுகள் அனைத்திற்கும் மிகக்குறைவான கட்டணத்தில் பிரயாண சீட்டுகள், விசா, வெளிநாட்டு பயணிகள் காசோலைகள், கடவைச் சீட்டுகள், பொண்ட் (BOND) இவை அனைத்திற்கும்
நகரில் நம்பிக்கை நிறுவனம்: கமல்ஸ் சேவிஸ்

**கமல்ஸ் சேவிஸ்,**

பஸ் நிலைய முன் - டில்க்கா கிறீம் கவுஸ் மேல்தளம்,
யாழ்ப்பாணம். தூரவசனி சுழல் இலக்கம்; 24174

விளம்பர வடிவமைப்பு:- ஜோ. எகட்டன் + மணிக்குரல் மேஜர் ஷண் = செனித் ADS

(A-1215)

## மன்னுர் பொதுச்சந்தையில் அதிரடிப்படை தாக்குதல்

மன்னுர், திங்கள்

மன்னுர் நகருக்கு நேற்றுக் காலை வந்த பொலிஸ் அதிரடிப்படையினர் பொதுச்சந்தையில் கூடிநின்ற மக்கள் மீது தாக்குதல நடத்தினர்.

அத்துடன் அங்கு நின்றவாகனங்களின் கண்ணுடிகளையும் உடைத்துநொருக்கியுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து நேற்று மன்னுர் நகரம் சன சந்தடியின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. [வவ.நிருபர்]

## இருவர் மீது சூடு

[மட்டக்களப்பு நிருபர்]

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பொலிஸ் கொமாண்டோக்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானுர்கள்.

மட்டக்களப்பு நகரில் இச் சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவ்விருவரும் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மா)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கலர் TV (JVC) 20'' அன்ரனுவுடன். தொடர்பு: துர்க்கா டிரேடர்ஸ், 85, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[C-4330]

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது. சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

நவீன, வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கட்டில், மெத்தைகள், கண்ணாடிமேசைகள், எழுதுமேசைகள், Formica சாப்பாட்டு மேசைகதிரைகள், Baby Cot, சிங்கர், எலக்ரிக் தையல்மெசின், Book Self, Meat Safe, பித்தளைக் குத்து விளக்குகள், கிடாரம், சில்வர் பொருட்கள், பீங்கான் கிளாஸ் வகைகள், T.V Stand, டெக், T.V, பெரியபித்தளை பூச்சாடிகள், Showcase, பற்பல உடன்விற்பனைக்கு. 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம் (St. Charles பாடசாலை அருகில்).
(C 4305,

### சேவை

நல்லூரில் ஆதீனத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விளம்பர நிலையததில் அண்ணா கோப்பியை உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்வதோடு மற்றும் அண்ணா உற்பத்திப் பொருள்களை வாங்கி இனைப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். A 1203

### தேவை

தையல் வேலைகளில் அனுபவம் உள்ள பெண்கள் உடனடியாகத் தேவை வட்டுக்கோட்டை தொகுதியில் இருப்பவர்கள் விரும்பத் தக்கது. தொடர்பு: லக்கி சென்ரர், பண்ணாகம், சுழிபுரம்.
[C 4358]

கனகராயன் குளத்திலிருந்து ஏழுமைல் தூரத்திலமைந்துள்ள புதுவிளாங்குளம் சிவன்கோவிலுக்கு நித்திய பூசகர் தேவை. வேதனம் மாதம் 600— 750 வரை. வேறு சலுகைகளும் உண்டு. நேரடியாக தொடர்பு கொள்வது விரும்பத் தக்கது. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ச. தணிகாசலம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம், கனகராயன்குளம்.
(C 4355)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

**WANTED**

For Hotel Employment Female Receptionists with ability to speak English and of good personality. Call without delay with Passport. Dr. T. Viswanathan, 'Rajasthan' Keerimalai Rd, Sandilipay. (C4361)

### தவறிவிட்டது

க. மயில்வாகனம் (பத்தர்) 262, கே. கே. எஸ். ரோட். என்பவர் சுதுமலையிலிருந்து யாழ்ப்பாணம் சைக்கிளில் வரும்போது தங்கமோதிரம் ஒன்றை தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[C 4349]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு
**கொழும்பு ஸ்ருடியோ**
(A 1041)

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது

தரமானது **புறா மார்க்** சுத்தமான கற்பூரம்
நாசன் இன்டஸ்ரி, கொழும்பு-யாழ்ப்பாணம்

★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

## நன்றி நவிலல்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து கடந்த 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏவப்பட்ட ''ஷெல்'' தாக்குதலுக்குப் பலியான எங்கள் குடும்ப விளக்கும், ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளருமான திரு. ச. சூரியகுமாரின் அவல மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டும், மலர் வளையம் சாத்தியும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், அனுதாபச் செய்தி அனுப்பியும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைத்து வங்கி உயரதிகாரிகள், ஊழியர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகப் பெருமக்கள், யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள், பத்திரிகை நிறுவனங்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாய்:
திருமதி ச. பிரசாதம்மா,

சகோதரன்:
திரு. ஸ்ரீஸ்கந்தராஜ சர்மா.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
[A 1214]

---

## பனையில் கட்டிடங்களுக்குத் தட்டுப்பாடு

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு பளையில் வர்த்தக நிலையக் கட்டிடங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இடம் பெற்ற சம்பவங்களையடுத்து அங்கு இயங்கிய பல வாத்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன அத்துடன் கிளிநொச்சியில் இயங்கிய அரசாங்க அலுவலகங்களும் பளையில் செயற்பட்டுவருகின்றன.

இதனால் பளையில் பலகாலமாக மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையக் கட்டிடங்களைப் பலர் போட்டி போட்டுக் கொண்டு வாடகைக்குப்பெற முயற்சிப்பதனாலேயே கட்டிடங்களுக்குத் தட்டுப் பாடு நிலவுகிறது.

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சின்னத்தம்பி
சௌந்தரநாயகி அம்மா
மல்லாகம்

மண்ணில்:- 3- 4- 1915
விண்ணில்:- 17- 8- 1982
திதி:- 1- 9- 1986

தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றென்றும் விட்டகலாது. ஆத்ம சாந்திப் பூசையும், திதியும் இன்று உமது குல ஆலயத்தில் நடைபெறும்.

துணைவன்.
[C 4308]

## முதலாம்ஆண்டு நினைவஞ்சலி



மு. இராசதுரை
மலர்வு:- 14- 6- 1937
உதிர்வு:- 12- 9- 1985
திதி:- 1- 9- 1986

நீங்கள் அணைந்து ஆண்டொன்றாகிவிட்டது. கால நீரோட்டம் கருகி மறைந்தாலும் எம் இதயங்களிலே ஏற்றி வைத்த அன்பெனும் சுடர் என்றும் ஒளிவீசியவாறே இருக்கும். இறைவனுடன் ஒன்றிவிட்ட உத்தமரே எம் கண்ணீர் மலர்களை உதிர்த்துக் காணிக்கையாக்குகின்றோம்,

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. C 4356)

---

## லண்டனில் திருமணம்

30-08-86 சனிக்கிழமை பகல் 1 மணிக்கும் 2 மணிக்கும் இடைப்பட்ட சுபவேளையில் நடைபெற்றது.



| மணமகன் | மணமகள் |
|---|---|
| **பேரின்பநாதன்** | **சித்ரா** |
| M. Sc. Engineering Student, London. | L. I. D. P. M. London. |
| திரு. திருமதி S சுப்பிரமணியம், ஓய்வுபெற்ற ஆசிரியரின் மகனும், | Dr. S. S. சேனாதிராஜா, திருமதி சத்தியவதி சேனாதிர ஜாவின் மகளும், |
| திரு. S. மகாலிங்கசிவம், (மாலி) 'ஈழநாடு லண்டன் நிருபரின் சகோதரரும். | காலஞ்சென்ற Dr. N. கோபாலபிள்ளை, திருமதி கோபாலபிள்ளையின் பேர்த்தியும். |

நண்பர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம்.

உரும்பிராய். யாழ்ப்பாணம்.
[A-1212]

## மனையியல் வகுப்புகள்

சிகை அலங்காரம், கேக் ஐசிங், சிற்றுண்டி தயாரிப்பு, செயற்கை மலர் தயாரிப்பு, மேலும் விபரங்கட்கு:

**மங்கா சோமசேகரன்,**
நீதிமன்ற வீதி,
(ஆரம்ப நீதிமன்றம் முன்பாக)
**மல்லாகம்.** [C 4320]

## சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு

(அகத்தியர் தேவாரத் திரட்டு, உமாபதி சிவாசாரியார் அருள்முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ் பாடல்களும் அடங்கிய திரட்டு)

தொகுத்தவர்: க. சி. குலரத்தினம்
விலை; ரூபா 19-00
வெளியீடு — விற்பனை
**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
(நல்லூர் சிவன் கோவிலுக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம். (C 4231)

## யாழ். நகரத்தில் பிரபல்யம் வாய்ந்த நிதி நிறுவனத்திற்கு ஒரு பியோன் தேவை

தகைமைகள்:-

யாழ். நகர எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், பியோன்வேலை செய்வதற்கு ஏற்றமனப்போக்கு உள்ளவராகவும். 01-09-86 அன்று 18 தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-09-86.

விளம்பர இல: A-1086
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
[A-1086]

## மணிவாக்கு

பெரிய மனிதர்களின் சாதனைகள் எல்லாம் திடீரென ஏற்பட்டவையல்ல. தமது சகாக்கள் படுத்து நித்திரையில் மூழ்கிவிட்ட வேளையிலும் இவர்கள் விழித்திருந்து இரவெல்லாம் உழைத்தவர்கள்.

— எச். டபிள்யு. லோங்பெல்லோ.

# நமதுநோக்கு

## பேச்சுவார்த்தைகளில் இளைஞர் குழுக்கள்

இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் நோக்கில் இந்திய அரசின் பின்னணியோடு தமிழர் விடுதலைக் கூட்டணி குழுவினர் இலங்கை அரசுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் எதுவித முடிவும் இன்றி முடிவடைந்துள்ளன.

ஏற்கனவே அரசாங்கம் முன்வைத்திருந்த மாகாண சபைகள் யோசனைகளின் அடிப்படையிலேயே இந்தக் கருத்துப்பரிமாறல் இடம்பெற்றது என்பது வெளிப்படை.

தமிழ் இளைஞர்களின் போராட்டம் முனைப்புப் பெற்று உச்சநிலையை அடைந்திருந்த வேளையிலேயே அரசின் இந்தப் புதிய யோசனைகள் முன்வைக்க பட்டன

முன்னர் இந்திய அரசின் பிரதிநிதிகள் இலங்கை அரசுடன் நடத்திய ஆலோசனைகளின் விளைவாக உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் இந்தப் புதிய யோசனைகளின் வாயிலாக தமிழ் மக்களுக்கு உண்மையாகவே கிடைக்கவிருக்கும் நன்மைகள்தான் என்ன என்பதைக் கண்டறிவதே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொழும்பில் நடத்திய பேச்சுக்களின் முக்கிய நோக்கம் அதேசமயம் தமிழ் மக்களின் அடிப்படையான கோரிக்கைகள் என்ன என்பதை உணர்த்துவதற்கும் இச்சந்தர்ப்பம் உதவியிருக்கலாம்.

பிரிவினைக்கு மாற்று யோசனையாக அரசு முன்வைத்துள்ளதாகக் கூறப்படும் மாகாணசபைகள் திட்டத்தில் வடக்கும் கிழக்கும் இணைக்கப்ப- வேண்டும் என்ற பிரச்னையில் இருதரப்புக்குமிடையில் காரசாரமாகவும், நீண்டநேரமாகவும் விவாதம் நடந்திருக்கலாம்என்று உய்த்துணரலாம்.

பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளும் உற்சாகம் அளிப்பவையாக இல்லை. ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் உண்டு. அடிப்படையில் திருப்தியில்லாத விடத்து பேச்சுக்களில் முன்னேற்றம் என்பதில் அர்த்தமில்லை,

எதுவானாலும் தமிழ்ப் பிரதேசங்களில் சர்வ வசதிகளும் கொண்ட இலங்கை இராணுவத்துடன் தமிழ் இளைஞர்கள் நேரடியாகப பொருது போரிட்டு வருகின்ற வேளையில், கொழும்பில் என்னதான் முடிவுகள் ஏற்பட்ட போதிலும் இவர்களின் இணக்கமின்றி அவை செயலுருப் பெறுவது சாத்தியமில்லை. இதனை இந்திய அதிகாரிகளும் உணராமலில்லை.

போராளிகள் நிராகரித்துவிட்டபின் கூட்டணியுடன் ஏன் ஜே ஆர் பேச்சு நடத்துகிறார் என தென்னிலங்கையில் திருமதி பண்டாரநாயகா கேள்வி எழுப்புகிறார்.

இந்த நிலையில் அடுத்து நடைபெறக்கூடிய பேச்சுக்களில் இளைஞர் குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும் என த.வி. கூட்டணியினர் கூறுவதில் நியாயமுண்டுதான் என்றாலும் இளைஞர் குழுக்களை அவ்வளவு எளிதாக இப்பேச்சுக்களில் ஈடுபடுத்த முடியுமா?

ஏற்கனவே திம்புவில் நடந்த பேச்சுக்களையும் அப்பேச்சுக்களை நடத்திக்கொண்டே இலங்கை அரசு தன்னை போருக்குத் தயார்படுத்திக்கொண்ட தன்மையையும் இளைஞர்கள் மறந்துவிடவில்லை.

இளைஞர் குழுக்கள் இலங்கை அரசுடன் நேரடியாக பேசுவதற்கான முகாந்திரம்தான் என்ன? அவசியம் பேசித்தான் ஆகவேண்டும் என்ற நிலைமை உருவாகியிருப்பின் வரவேற்கவேண்டியதே! கொழும்புப் பேச்சுக்களின் சரியான விபரம் தெரியாத நிலையில் இது பற்றி விமர்சிக்கத் தேவையில்லை.

அதேசமயம் நேரடிப் பேச்சுக்கள் அவசியம்தான் என இந்திய அரசு உணரும் பட்சத்தில் ஏற்கனவே இளைஞர் குழுக்களால் முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படைக் கோரிக்கைகள் பற்றிய இலங்கையரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியாகவேண்டும்.

திம்புப் பேச்சுக்களின் போது ஏற்பட்ட சூழ்நிலை இனியும் ஏற்படமுடியாது!

## சொக்கவளவுசோதி

பக்கத்தில் படைமுகாம்கள் பகலிரா விடிமுளக்கம்
திக்கெலாம் மரணஓலம் தீ வெலாம் பதற்றம்அச்சம்
விக்கினம் ஏதுமின்றி குப்பிழானூர்ரைக் காக்கும்
சொக்கவளவுச்சோதி விநாயகா போற்றி! போற்றி!

சிந்தனைச் சிறப்புசெல்வம் சீரியஒழுக்கத்தோடு
செந்தமிழ்க் குப்பிழானூர் செழிப்புற
அருள்களெல்லாம்
தந்தெமைப் பாலிக்கின்ற சோதி விநாயகா நீ
விந்தைகள் செய்யுமெங்கள் வீரர்க்கும் அருளுவாயே!

--- க. பொ. நடனசிகாமணி

(குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய அலங்காரத் திருவிழாதற்பொழுது நடைபெற்று வருகின்றது)

## பீரங்கிப்படகால் மக்கள்பீதி

யாழ்ப்பாணம், திங்கள்

மண்டைதீவுக் கடலில்பீரங்கிப்படகு ஒன்று கடந்த சில நாட்களாகத் தரித்து நிற்கிறது.

இப்படகு கடலில் தரித்து நிற்பதால் இப்பகுதி மக்கள் பீதியடைந்து காணப்படுகின்றனர். (மா)

## ஆசாரியாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சிவஸ்ரீ பா. வை. தியாகராஜக் குருக்களுக்கு ஆசாரியாபிஷேகமும், தீக்ஷை உபதேசமும் ஊரெழுவில் நடைபெறவிருக்கின்றது. சிவாகமசிரோமணி சிவஸ்ரீ சி குஞ்சிதபாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து இதனை நடாத்திவைப்பார்கள். (ஒ)

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், திங்கள்

நாட்டின் பல்வேறு இடங்களிலும் அகதிகளாக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகமாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சென் ஜோன்ஸ் முதலுதவிக் கழக அங்கத்தவர்களால் இரண்டாவது தடவையாக எண்ணுயிரம் ரூபாவும் உடுபுடவைகளும் சேகரிககப்பட்டன.

இப்பணமும் உடுபுடவைகளும் அதிகாரமளிக்கப்பட்ட தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழக துணைத்தலைவர் திரு நல்லித்தம்பி, கழக உறுப்பினர் திரு ஆ கனகசபாபதி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (ஒ)

## மக்கள் கருத்து

### பண்பாளர் ஜே. ரி. பீரிஸ்

ஜே. ரி. புத்தகக்கடைஉரிமையாளர் திரு. ஜே. ரி. பீரிஸ் ஷெல் தாக்குதலில் மரணமானார் என்ற செய்தியை ஈழநாட்டில் பார்த்ததும் மிக அதிர்ந்து போனேன்.

திரு. ஜே ரி. அவர்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவரது வாடிக்கையாளர்களில் ஒருவனாகிய என்னோடு அவர் பழகிய விதம் நெஞ்சை அள்ளும் தன்மையது. பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாங்கவரும் வாடிக்கையாளர் யாருக்காவது பணப்பற்றுக்குறை ஏற் ஏற்பட்டால் உடனே பத்திரிகைகளை எடுத்துக் கொண்டு போங்கள். மிகுதிப் பணத்தை மற்றமுறை வரும்போது தாருங்கள் என்று சொல்லும் பண்பு அவருடையது இதைவி- ஒரு வாடிக்கையாளனுக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றைச் சுணங்கி வருபவர்களுக்குக் கூட சேர்த்து வைத்துக் கொடுக்கும் முறையும்போற்றுதற்குரியது.

நா. இரகுநாதன்
வேலணை.

வடமாகாண வேலையற்ற

## பட்டதாரிகள் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் ஞாயிறு

இலங்கை இந்திய பல்கலைக் கழகங்களில் சங்கீதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் முதலான துறைகளில் பட்டம் பெற்ற பலபட்டதாரிகள், பட்டதாரிகள் சங்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்,

சங்கத் தலைவராக திரு வி. ஏ சிவராசாவும் காரியதரிசியாக கே. ரஞ்சித்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமாநில கல்வியதிகாரி திரு இரா. சுந்தரலிங்கம் அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. த மகாசிவம் கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினரான திரு. ஆ கந்தையா ஆகியவர்ாளின் உதவியுடன் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கும்படி அரசை வற்புறுத்துவதென சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டு இதன் ஆரம்ப நடவடிக்கையாக வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களடங்கிய மகஜர்ஒன்று ஜனாதிபதி, கல்வியமைச்சர், கல்விச் சேவை ஆணைக்குழு ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் வேலை அற்ற பட்டதாரிகள் தமது பெயரை இச்சங்கத்தில் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். (இ)

கிளிநொச்சி

## நான்கு பாடசாலைகள் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு சமீபமாக கடந்த மூன்றுமாத காலமாக மூடப்பட்டுக் கிடக்கும் ஐந்து பாடசாலைகளில் கனிஷ்ட மகாவித்தியாலயம் தவிர்ந்த ஏனைய நான்கு பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளன

கனிஷ்ட மகாவித்தியாலயம் இராணுவ முகாமுக்கு அருகாமையில் இருப்பதால் இதனைத் திறப்பதில் பல கஷ்டங்கள் உள்ளதாக பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், மகளிர் கல்லூரி, கனகபுரம் பாடசாலை முதலானவையை திறப்பதிலும் பாதுகாப்பற்றநிலை உள்ளதாகவும தெரிவிக்கப்பட்ட போதும் மாணவரின் கல்வியைக் கருத்தில் கொண்டு இப்பாடசாலைகளைத் திறக்க வேண்டிய அவசியம் உள்ளதாகக் கூறப்பட்டது.

இதேவேளை மூடப்பட்டுள்ள ஐந்து பாடசாலைகளையும் திறக்குமாறு கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம், மன்சூர், இராணுவ அதிகாரி முதலானோர் பிரஸ்தாப பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளனர். (கிளி நி-வா)

மாவையில் ஷெல் தாக்குதல்:

## வீடுகளை விட்டு இரவு மக்கள் வெளியேற்றம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டிப் பகுதியில் கடந்த வெள்ளிககிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம், 'ஷெல்' தாக்குதல் காரணமாக அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. மக்கள் வீடுகளை விட்டு இரவோடிரவாக வெளியேறினர்.

மாவிட்டபுரம்—கீரிமலைவீதியில் இரவு 10 மணியிலிருந்து 1 மணிவரை இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது.

அப்பகுதியில் போராளிகள் ஆயுதபாணிகளாக நடமாடியதாகவும் காங்கேசன்துறை சீமெந்து ஆலை முகாம், ஹாபர்வியூ ஹோட்டல் முகாம் ஆகியவற்றின் பகுதியிலிருந்து ஷெல் தாக்குதல் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது.

இதையடுத்து பரபரப்பு ஏற்படவே மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நாடினர்.

முகாம்களிலிருந்து ஏவப்பட்டஷெல்கள் மாவிட்டபுரம் கிளானை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வா)

## நல்லை விசாகன்

செந்நெற் கழனிசூழ் செல்வஞ்சேர் நல்லூரில்
கந்தனிரு தேவியர்களி நடுவே — வந்தின்று
சப்பரத்தில் ஏறிக் தமிழர்க் கருள்சுரப்பான்
சுப்பிர மண்யன்ருள் சூடு.

★ ★ ★ ★

வேத ஒலியும் விளங்கும் உயர்மணியின்
நாதமுங் கேட்டுமக்கள் கண்விழிக்கும் — ஓதுமுயர்
நல்லை விசாகனவன் நல்லசப் பரமேறித்
தொல்லை தவிர்ப்பான் தொழு.

★ ★ ★ ★

செல்வர்வாழ் நல்லைத் தேவசே னாதிபதி
சொல்லுமுயர் சப்பரத்தில் இன்றேறி
— தொல்லைகளைப்
போக்கி அருள்புரிவான்; போதகத்தை
ஆக்கிடுவான்
காக்குங் கடவுளவன் காண்.

--- கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

(இன்று நல்லூர்க்கந்தன் 23ம் திருவிழா — சப்பரம்)

# "மல்லிகை"யைப் பார்த்தால் மறுமலர்ச்சி நினைவுவருகிறது

## மலர் வெளியீட்டுவிழாவில் வரதர்

யாழ்ப்பாணம்

''மல்லிகையைப்பார்த்தால் 'மறுமலர்ச்சி' ஞாபகம் வருகிறது. புதிய எழுத்தாளரைத் தோற்றுவிப்பதிலும் வழமையாக எழுதிக்கொண்டிருப்பவர்களை ஆதரித்து அரவணைத்துச் செல்வதிலும் மல்லிகை முன்னிற்கிறது'' என்று மல்லிகை இருபத்திரண்டாவது மலர்வெளியீட்டு விழாவிற்கு தலைமைவகித்து உரையாற்றிய தி ச. வரதராசன் கூறினர்

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலை கட்டிடத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வரதராசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''மல்லிகையின் வளர்ச்சிக்கு ஜீவாதான் காரணம். நேர்மையான அரசியல்வாதியாகவும் நல்ல எழுத்தாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் திரு. ஜீவா திகழ்கின்ருர்'' என்ருர்.

இருபத்திரண்டாவதுஆண்டு மல்லிகை மலரின் முதற்பிரதியை பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளையும் சிறப்புப்பிரதியை சமுத்திரா மல்ரி சேவிஸ் முகாமையாளர் திரு. சி. கிருஷ்ணபிள்ளையும் தலைவர் திரு வரதராசனிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இவ் விழாவில் கலந்துகொண்ட திரு சி. வன்னியகுலம் பேசுகையில்: ''தொழிலாளிவர்க்க இலக்கியத்தை வளர்க்க முற்போக்கு இயக்கங்களுக்கு நிறுவனம் ஒன்றும் இல்லாதவேளையில் டொமினிக்ஜீவாவின் மல்லிகை ஆரம்பிக்கப்பட்டதுடன் சுயநல மற்றநோக்குடன் எல்லோருக்கும் களம் அமைத்துக் கொடுத்துவருகின்றது. ஆரம்பத்தில் தேசிய விடுதலைக்கும் வர்க்கவிடுதலைக்கும் தற்போது இனவிடுதலைக்கும் என்று பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக சமூகத்தைப் பிரதிபலிக்கும் சஞ்சிகையாக மல்லிகை வெளிவருகிறது'' என்ருர்.

திரு.க.சட்டநாதன், திரு வ. இராசையா கம்பன்சழக செயலர் திரு இ.ஜெயராஜ் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

இறுதியாக மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பதிலுரையில்: ''இன்றைக்கு வரைக்கும் இந்த மண்ணை நேசித்து இந்த மண்ணிற்காக மடிந்தவர்களை நான் மதிக்கிறேன். சென்னைக்கும் கடைாவிற்கும் ஓடுவதைவிட இந்த மண்ணில் நடக்கும் அழிவுகளுக்கு மத்தியில்நின்று வாழ்பவர்கள்தான் மனிதர்கள்.

''எமதுநாடு வியட்னுமாக மாறிக்கொண்டு வருகிறது. சாவும்-வாழ்வும்- அரசியலும்- போராட்டமும் பின்னிப் பிணைந்துவிட்டன. இது தவிர்க்க முடியாததொன்ருகும்'' என்று தெரிவித்தார்

[ச-ஒ]

## அமரர் ஆலாலசுந்தரம் நினைவு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

முன்னுள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான அமரர் திரு. எம். ஆலாலசுந்தரம் மறைந்த ஓராண்டு நினைவுகுறித்து கோப்பாய்த் தொகுதியிலும் நல்லூரிலும் மற்றும் பல இடங்களிலும் சமய நிகழ்ச்சிகள், அன்னதானங்கள், படத் திறப்புவிழாக்கள் என்பன நடைபெறவுள்ளன.

கல்வியங்காடு சந்தை மைதானத்தில் அமரர்ஆலாலசுந்தரம் பெயரில் இன்று திங்கங்கிழமை மாலை ஆலால் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்படும். இம் மண்டபத்தை யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் திறந்துவைப்பார்.

நாளை செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு பேய்ச்சி அம்மன் கோவிலில் அதிகாலை விசேட பூசையும் நண்பகல்

(11ம் பக்கம்பார்க்க)

## தீந்தமிழ் மக்கள் மறவாரே!

இனிதாம் எங்கள் தமிழ்மொழியை
எல்லா நாட்டிலும் பறைசாற்ற
தனிநாயகனுய் தலைப் பட்டு
தமிழா ராய்சிமா நாடுதனை
இனிதாய்க் கூட்டி எல்லோர்க்கும்
எடுத்து இயம்பிய பெருமானுர்
தனிநாயக மெனும் அடியாரை
தமிழ் கூறு(ம்) உலகம் மறவாதே!

தனிப்பெரும் முதல்வனுய் நின்றுகொண்டே
தமிழை வளர்த்திட வேண்டுமென்ற
இனிதாம் உந்தன் எண்ண மெலாம்
ஈடேறி வருகின்ற வேளையிலே
ஏனே இறைவன் எங்களிடம்
இருந்து பிரித்தான் நின்பணியை
தேனும் தமிழை வளர்த்ததனுல்
தீந்தமிழ் மக்களுமை மறவாரே.

--- நயினை இராகுலம்

[இன்று தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினம்]

## மறைந்த பெரியாருக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம் ஞாயிறு

''கருணுகரன் பாதம் சனவிலும் துணை செய்யுமென்பதில் நிறைந்த நம்பிக்கையும் பக்தியுமுடையவர் இளைப்பாறிய சுங்கத் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் திரு மு. பசுபதி, உரும்பராய் கருணுகரப்பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையின் தனுதிகாரியாக இருந்து அவர் ஆற்றிய பணிகள் அநேகம். சிவனடியே சிந்திக்கும் சிறப்பியல்புடைய திரு பசுபதி சிவநாம பஜனை செய்துகொண்டே சிவனடியைச் சேர்ந்துவிட்டார். அது அவரது சால்புக்குக்கிடைத்த பரிசு''

சுங்கத் திணைக்களத்தின் இளைப்பாறிய பிரதம கணக்காளர் திரு மு. பசுபதியின் அஞ்சலிக்கூட்டத்தில் அறிமுகவுரைநிகழ்த்திய உரும்பராய் கருணுகரப்பிள்ளையார்கோயில் திருப்பணி ச்சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருப்பணிச்சபையின் தலைவர் திரு கா. தம்பு தலைமையில் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் இடம் பெற்ற இவ்விழா இசையரசி திருமதி பூமணி நடராசாவின் பிரார்த்தனைக் கீதங்களுடன் ஆரம்பமானது.

இந்துசாதனம் பிரதம ஆசிரியர் சட்டத்தரணி நமசிவப் பிரகாசம், இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு செ சிவஞானம், இளைப்பாறிய மாவட்ட நீதிட தி திரு சி தப்பித்துரை, உரும்பராய் சந்திரோதயவித்தியாசாலை அதிபர் திருமதி மகேஸ்வரி சரவணமுத்து முன்னைநாள் அதிபர் திரு க சோதிலிங்கம், சமாதான சபைத்தலைவர்திரு செ ஐயாத்துரை, இளைப்பாறிய வட்டாரக் கல்வியதிகாரி வ நடராசா பண்டிதர் நீ சி முருகேசு, திரு நா பொன்னுத்துரை, பண்டிதவித்துவான் இ திருநாவுக்கரசு உட்பட லர் திரு. மு.பசபதியின் சேவையினைப் பாராட்டிப் பேசினுர்கள். [அ]


## அபிவிருத்தி நிதியம்

மாதாந்தசீட்டு 10-09-86இல் ஆரம்பிக்கப்படுகிறது

பணத்தை இலாபகரமாகச் சேமிப்பதற்கும் அவசரத் தேவையேற்படின் நியாயமான கழிவுடன் அதிக நிபந்தனைக்குட்படாதவாறு மீளப்பெறவும் வழியமைக்கும் சாதனமே 'சீட்டு' ஆகும்.

இம்முறையில் பணம் கையாளப்படல் பாரம்பரியமாக எமது மக்களால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஆனுலும் துரதிர்ஷ்டவசமாக நிறுவன ரீதியில் இம்முறை நடைமுறையாவது மிகஅரிதாகவேயுள்ளது.

இதனை ஒழுங்கமைத்து புதுவடிவங்களில் வாடிக்கையாளர்களின் அபிப்பிராயங்களோடு நிறுவன ரீதியாக மேற்கொள்கிறேம். நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படும் இவ்வகைச் செயற்பாட்டினூடாக முறைசாராத்துறையினரின் சேமிப்புக்களைத் திரட்டி அவற்றை அபிவிருத்திக்கான மூலதனமாக்கலில் ஈடுபடுத்துவதற்கு நிறுவனம் முடிவுசெய்துள்ளது.

சகல விபரங்களுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

அபிவிருத்தி நிதியம்
337, கஸ்தூரியார் வீதி,
(கன்னுதிட்டி)
யாழ்ப்பாணம்.

உடனே ஆரம்பமாகிறது

மாதாந்தச் சீட்டு
உறுப்பினர் 10 மாதங்கள்

| தொகுதி | சீட்டுத் தொகை | பெறுமதி |
|---|---|---|
| A | 100/- | 1000/- |
| B | 250/- | 2,500/- |
| C | 500/- | 5,000/- |
| D | 1,000/- | 10,000/- |
| E | 5,000/- | 50,000/- |

[A-1091]

## வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணுடித்தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர், (Bubblers), கெல்ப்பர் (Helprs), புளோவர் (Blowers) தரததிலுள்ளவர்கள் தேவை. வேலை பழகுபவர்களும் [ஆண்கள் மட்டும்] தேவை உடனே நேரில் வரவும்,

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி. [C4284]

## பிரயாண ஒழுங்குகள்

கனடா, டென்மார்க், ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு

மேசன், தச்சுத்தொழில், வீதித்திருத்தம், விவசாயம் போன்ற தொழிலாளர்கள் பதவிகளுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படங்கள், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொன்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

உங்களின் தொடர்புகளுக்கு:

ஒமேகா ரவல்'ஸ் அன்ட் டூர்ஸ்
குப்பிளான்
எம். முருகையா
(குப்பிளான் சந்திக்கு அருகாமையில்) (C 4338)

# சாவில் வென்றனர்

உன்னதமான இலட்சியத்திற்காக உயிரைத்தியாகம் செய்யும் மனிதனே மாந்தருக்குள் தெய்வமாகிறான். ஆங்கிலேயர்கள் இதையே "No hero is mortal till he dies" என்று சொல்லுவார்கள்'

ஈழநாட்டின் அருந்தவப் புதல்வர்களான திரு வி தர்மலிங்கம், திரு. மு ஆலாலசுந்தரம் ஆகியஇருவருமே உயிர்த்தியாகம் புரிந்து மாந்தருக்குள் உன்னத நிலையை அடைந்துவிட்டனர்.

தந்தை செல்வாவின் தலைமையில் ஈழத் தமிழினத்திற்காக 20 ஆண்டு காலத்திற்கு மேல் தொண்டாற்றிய பெருமைக்குரிய இந்த இருவரும் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டுத் தமிழர்கள் பதைபதைத்தனர்.

சொல்லொணாத வேதனையுடனும் துயருடனும் கடந்த காலத்திற்கு எனது நினைவுகள் தாவுகின்றன.

1981ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபரில் ஈழநாட்டிற்கு நான் சென்றிருந்த போது முதன்முறையாக இவர்கள் இருவரையும் சந்தித்தேன்.

செப்டம்பர் 29 ஆம் தேதியன்று தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் அவரது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அவர்களும் தங்கள் இல்லத்தில் அளித்த விருந்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள்பலரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன். பேசி மகிழ்ந்தேன், ஈழத்தமிழருக்குற்ற இன்னல் குறித்து அவர்கள் எனக்கு விளக்கிக் கூறினர்கள்.

அமைதியான தோற்றத்துடன் காட்சிதந்த திரு. தர்மலிங்கம் ஆழ்கடல்போலஅறிவு நிரம்பியவர் என்பதைப்புரிந்து கொண்டேன் நிறைந்தஞானமும் அவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் ஆற்றலும் அவரிடம் குடிகொண்டிருப்பதைக் கண்டேன்.

திரு.ஆலாலசுந்தரம் சற்றே மாறுபட்டவராகக் காட்சி தந்தார். துடிப்பான தோற்றமும், நறுக்குத் தெறித்தாற் போன்ற சொல்லாற்றலும் நிரம்பியவராக இருந்தார்.

அன்றைய பொழுது இனிமையான பொழுது. திரு அமிர்தலிங்கம் அவர்களின் அளப்பரிய அன்பும், திருமதி மங்கையர்க்கரசி அவர்களின் விருந்தோம்பும் பண்பும் மற்ற நண்பர்களின்பரிவும் இணைந்து. மகிழ்வித்த அந்த நாளை என்றும் மறக்கவியலாது.

1-10-81 அன்று சுன்னுகம் சென்றேன். திரு. தர்மலிங்கம் அவர்களைச் சந்தித்தேன். சிங்களப் பொலிசாரால் எரிக்கப்பட்ட தமிழர் கடைகளையும், வீடுகளையும் அவருடன்சென்று பார்த்தேன் திரு மகாராசன், திரு குணளன் ஆகியோர் உடன் வந்தனர்.

தெல்லிப்பழை துர்க்கை கோவிலுக்கு என்னை அன்போடு அழைத்துச்சென்று வழிபட வைத்தார். பிறகு புகழ் பெற்ற தனலக்குமி புத்தக சாலைக்கு அழைத்துச்சென்ருர். தமிழகத்தில் கிடைக்காத பல தமிழ் நூல்கள் அங்கிருந்தன அவற்றை வாங்கிக் கொண்டு பணம்தர முயன்றபோது கடை உரிமையாளர் வாங்கமறுத்தார். வியப்புடன் திரும்பியபோது திரு தர்மலிங்கம் புன்னகையோடு நின்ருர். "எங்கள் பரிசாக எடுத்துச் செல்லுங்கள்' என்ருர் அவர் அன்பு கண்டு நான் நெகிழ்ந்துபோனேன்.

## ப. நெடுமாறன்

### தமிழ்நாடு காந்தி காமராஜ் தலைவர்

அவரிடம் பேசியபோது இரு விஷயங்களை முக்கியமாக வலியுறுத்தினர்;

1 சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தை எக்காரணம் கொண்டும் புதுப்பிக்கப்படாது.

2. இலங்கையிலிருந்து எவரையும் கட்டாயமாக இந்தியாவிற்கு அனுப்பக்கூடாது.

இந்த இரு கோரிக்கைகளையும் இந்திய அரசுக்குஉணர்த்தி ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மலையகத் தமிழர்கள்பால் அவருக்கிருந்த அன்பு என்னை வியக்க வைத்தது

நான் தமிழகம் திரும்பியவுடன்எம் ஜி ஆர் முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிமாநாட்டில்மேற்கண்ட இருகோரிக்கைகளையும் வலியுறுத்திப் பேசினேன். அனைத்துக்கட்சிக்குழுவினரும் பிரதமர் இந்திராவைச் சந்தித்தபோதும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தினேம். பிரதமரும் கொள்கையளவில் இதை ஏற்றபோது அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன் திரு தர்மலிங்கம் அவர்களுக்குக் கடிதமூலம் இதைத் தெரிவித்தேன்

2-10-81 காந்தியடிகள் பிறந்த நள் அன்று திரு ஆலால் வீட்டில் எனக்குவிருந்து காங்கேசன்துறையில் நடந்த கலை விழாவிற்குச் சென்றுவிட்டு அவர் இல்லத்திற்குச் சென்றேன். ஆலால் தம்பதிகள் அன்பொழுக உபசரித்தனர்.

அன்று ஆலால் மனந்திறந்து பேசினர்

இரத்தினபுரி நீர்கொழும்பு போன்ற இடங்களில் வாழ்ந்த பூர்வீகத் தமிழர்கள் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள்; மெல்ல மெல்ல தமிழை மறந்து சிங்களம் கற்று சிங்களவராகிக் கொண்டிருப்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டினர்.

சிரில் மத்தியூ, நெவில் பெர்னண்டோ போன்ற சிங்கள வெறியர்கள் திட்டமிட்டே கலவரங்களை நடத்துவதாக் ஆதாரத்துடன் கூறினர்.

அன்று மாலையில் காந்தியடிகள் விழா ஒன்றில் கலந்து கொண்டு இருவரும்பேசினேம்

காந்தியடிகளைப் போலவே தமக்கும் திரு. தர்மலிங்கத்திற்கும் சாவு காத்திருக்கிறது என்பதை அவரும் அப்போது உணர்ந்திருக்கவில்லை. நானும் அறிந்திருக்கவில்லை.

குறுகியகாலமே பழகினலும் மறக்கமுடியாத அந்த நண்பர்களை நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் படுகொலை செய்யப்பட்ட கொடூரத்தை எண்ணிக்குமைகிறேன். இக்கொலைகளை யார் செய்திருந்தாலும் அவர்கள் தமிழினத்திற்குத் துரோகம் இழைத்து விட்டார்கள்.

கொலையாளிகள் உண்மையில் தோற்றுவிட்டார்கள். கொலையானவர்கள் வென்று விட்டார்கள். ஏனெனில் அவர்கள் அமரத்துவம்பெற்று விட்டார்கள்.

"டக்ளஸ் ஹைட்" என்னும் ஆங்கில அறிஞன் கூறியதை இங்குசுட்டிக்காட்டுவது பொருத்தமாக அமையும் என நம்புகிறேன்.

மரணதண்டனை பெற்றனர் இருவர். அவர்களில் ஒருவர் கூறினர்:

If it had not been for these things, I might have lived out my live talking at street corners to scorn men I might have died unmarked. unknown a failure Now we are n t a failure. This is our, career and our triumph, Never in our full life could we hope to do such work for tolerence. for justice, for man's underst nding of man as now we do by accident Our words-our lives-our pains -nothing That last moment belongs to us-that agony is our tr umph.

— நன்றி: நினைவுமலர்

# அமரர் வி. தர்மலிங்கத்தின் ஓராண்டு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், திங்

முன்னுள் மானிப்பய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி தர்மலிங்சத்தின் ஓராண்டு சிரார்த்ததினம் நாளை செவ்வாய்க்கிழமை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது!

அன்றைய தினம் காலை தாவடியில் அமைந்துள்ள நினைவு ஸ்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தியபின் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் அபிஷேக ஆதாரனைகளும் துர்க்காபுரம் அன்னபூரணி மண்டபத்தில் அன்னதானமும் வழங்கப்படும்

பிற்பகல் 3 மணிக்கு உடுவில் உள்ளூராட்சி மன்றத்தில் அவரது நினைவுச் சின்னம் யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசாவினுல் திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் முன்னுள் உடுவில் உள்ளூராட்சித் மன்றத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். யாழ். அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் முதன்மை விருந்தினராகக்கலந்து கொள்வார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா. அப்பாக்குட்டி பேராசிரியர் ப. சந்திரசேகரம், வண. பிதா. ம. அல்பேட் யோகராசா திரு. அ நடராசா, தி. மாணிக்கவாசகர் உட்பட மற்றும் பலர் நினைவுரைகள் நிகழ்த்துவார்கள்: (வா)

# கொத்தணி அமைப்புக்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்றும்தவணை ஆரம்பத்திலிருந்து மூன்று புதிய கொத்தணிப் பாடசாலை அமைப்புகள் உருவாகவுள்ளன இவ் அமைப்புகளுக்கான அங்கீகாரமும் இவற்றின் கொத்தணி அதிபர்களுக்கான நியமனக் கடிதங்களும் கல்வி அமைச்சின் செயலாளரினுல் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தை முதன்மைப் பாடசாலையாகக் கொண்டு உருத்திரபுரம் கொத்தணிப் பாடசாலைகவ் அமைப்பு உருவாக்கப்பட்டு மூலாதாரப் பாடசாலையின் தற்போதைய அதிபராக விளங்கும் திரு. பொ. சபாபதி அதன் கொத்தணி அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

முரசுமோட்டை மகா வித்தியாலயத்தைமுதன்மைப் பாடசாலையாகக கொண்டு பரந்தன் - முரசுமோட்டை கொத்தணி பாடசாலைகள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் கொத்தணி அதிபராக தற்பொழுது அக்கிராயன் கொத்தணி பாடசாலைகள் அமைப்பின் கொத்தணி அதிபராகவுள்ள திரு ஏ. கே. இராசேந்திரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தை மூலாதாரப் பாடசாலையாகக் கொண்டு வட்டக்கச்சி கொத்தணி பாடசாலைகள் அமைப்பு உருவாகப்பட்டு இதன் அதிபராக திரு வி. கே சாம்பசிவம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்பொழுது கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலயத்தின் அதிபராக விளங்குகிருர்

ஏற்கனவே கிளிநொச்சியில் நான்கு கொத்தணி பாடசாலை அமைப்புக்கள் இயங்குகின்றன. இக் கொத்தணி அமைப்புக்களின் அதிபர்கள் கொத்தணி அதிபர்களுக்குரிய கடமைகளுடன் வட்டாரக் கல்வி அதிகா களின் கடமைகளும் திகாரங்களும் உடையவர்களாக விளங்குவர். [வி)

# மன்னுர் செய்திகள்

## கிராமஅபிவிருத்தித் திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டங்களில் மன்னுர் மாவட்டத்தில், வங்காலை மத்திய மகாவித்தியாலயக்கட்டிடம். வங்காலை, மின்சாரஇணைப்பு வசதிகள், தண்ணீர் திட்டம் போன்ற செயல் திட்டங்கள்யாவும் தற்சமயம் பூர்த்தியடையும் தறுவாயில் உள்ளன. இதற்கான நிதிமுன்னுள் தேசிய அரசபேரவை உறுப்பினர் பி. எஸ். சூசைதாசன் முயற்சியால் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வித்தியாலய கட்டடம்

வங்காலையில் தற்சமயம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்மாடி மத்தியமகாவித்தியாலயக் கட்டடத்திற்கு மன்னுர் முன்னுள் தேசிய அரச பேரவை உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசனின் பெயர் சூட்டப்படவுள்ளது.

## மாவட்ட கருத்தரங்கு

மன்னுர்மாவட்டதேசியஇளைஞர்சேவை மன்றம் மன்னுர் மாவட்டரீதியில் இந்தவாரத்தில் ஓர்கருத்தரங்கை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. இதில் மன்றத்தின் நோக்கம், அதன் அமைப்பு. செயல் திட்டங்கள்போன்றவைபற்றிகருத்துக்கள் பரிமாறப்படும் இதற்கான பூர்வாங்க வேலைகளை மாவட் இளைஞர்மன்ற அதிகாரி, ஏனைய அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

## 1000 ரூபா வழங்கபபட்டது

அண்மையில் பேசலை/கரிசல் கடலில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமான பன்னிரு குடும்பங்களுக்கும் மன்னுர்மாவட்ட துயர்துடைப்புச் சங்கம் தலா ஆயிரம் ரூபாய் வழங்கியது. இதே வேளையில் காயப்பட்ட எட்டு குடும்பங்களுக்கும் தலா 300 ரூபாவும் வழங்கப்பட்டது இதனை மன்னுர் துயர்துடைப்புச் சங்கத்தினர் மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு, எம். எம். மக்பூல் சிபார்சுடன்வழங்கினுர். சங்கத்தலைவரும் மாவட்ட குழுமுதல்வருமான அருட்திரு அ. சேவியர் குரூஸ், தலைமைபீடஉதவி அரசாங்க அதிபர் திரு அ. அருந்தவச்செல்வன் மன்னுர் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சண்முகநாதன், பேசாலை/ஒலைத் தொடுவாய் கிராம சேவை அலுவலர்கள் ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

## அங்குரார்ப்பண கூட்டம்

மன்னுர்மாவட்ட பனைவள அபிவிருத்திச்சங்கக் கூட்டம் இம்மாத நடுப்பகுதியில் மன்னுர் பனைவள அபிவிருத்தி அலுவலகரின் அலுவலகத்தில் கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்துக்கு பனைவள வெளிக்களஉத்தியோகத்தர் திரு. மு. நல்லக்குமார், மன்னுர் உதவி அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன், மாவட்டத்திலுள்ள கிராமசேவை அலுவலர்களும் பங்குபற்றுவார்கள்;

## மருத்துவநிலையம்

மன்னுர்மாவட்டத்திலொருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டத்தினை பேசாலையில் பலலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டநவீன வசதிகளைக் கொண்ட மருத்துவ வேலைகள்யாவும் பூர்த்தியடைந்துவிட்டன.

## சென். ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம்

அண்மையில் பேசாலையில் சென் ஜோன்ஸ் கிரிக்கெட் விளையாட்டுக்கழமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இக் கழகத்தின் தலைவராக திரு அ. சூசை பீரிஸ், உபதலைவராக; திரு. பா. நிமால் மிராண்டா செயலாளராக: திரு ப. டெனிஸ் லெம்பேட், பொருளாளராக திரு. பச்சேக், பிரதம நிர்வாக இயக்குநராக திரு. ச. பிளேசியஸ் டயஸ், விளையாட்டுத் தலைவராக; திரு. கே. புறுவ டயஸ் என்பவரும் தெரிவாகினர். இக்கழகம் தற்சமயம் மன்னுரில் பல போட்டிகளில் பங்கெடுத்து அமோக வெற்றியீட்டியுள்ளது.

## இடமாற்றம்

மன்னுர் உயிர்த்தராசன் குளம் றோ. க. பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய திரு அ, குணசேகரம்குரூஸ் உயிலங்குளம்றோ க பாடசாலை அதிபராகவும், உயிலங்குளம் றோ.க. பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் திரு ஆ ஜி. முரும்ஸ் முள்ளிக்குளம் றோ க. பாடசாலையின் அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## மறைக்கல்வி விழாக்கள்

தலைமன்னுர் பேசாலை பங்குகளில் இம்மாதம் 7ம் திகதி மறைக்கல்வி விழாக்கள் நடைபெறும். இவ்விழாக்களில் மறைக்கல்வியை பிரதிபலிக்கும் நாடகம், பேச்சு, வில்லுப்பாட்டுப் பாடல் நகைச்சுவை போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். இதற்கான வேலைகளை பங்குத்தந்தை அருட்திரு இராசலிங்கம் அல்பன் மேற்கொண்டு வருகின்ருர். (இ)

## முதலிடம்

அடம்பன் கல்வி வட்டாரத்தில் நடைபெற்ற தமிழ் தினப்போட்டியில் கூடிய முதலிடங்களை பெற்ற பாட

மன்னுர் பறுப்பாவகண்டல் மகா வித்தியாலயமாகும் குறிப்பாக கவிதை கட்டுரைகள் சொற்பொழிவுகளில் இப்பாடசாலை பல முதலிடங்களை பெற்றுக்கொண்டது இதனுல் இப்பாடசாலை அதிபர் திரு. அ அதிரியான் சோசை பலரது பாராட்டை பெற்ருர்.

# யாருடையது?

திருநெல்வேலி பலாலி வீதியைச் சேர்ந்த திருமதி சரோஜின்தேவி புஷ்பரத்தினத்தின் கைப் பையை ஒரு அன்பர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# பரிசு பெற்ருர்

கொழும்பு ஞாயிறு.

சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன உலக பட்டினி ஒழிப்பு இயக்கத்திற்கான 25ஆயிரம் டொலர் 'ஆலம் ஸான் ரீஸ்ரின்' பரிசை பெற்றுள்ளார்.

திரு ஆரியரத்னவே உலகில் முதன்முதலாக இப்பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

[சி-வா]

# மக்கள் சேவையில் மறைந்த தலைவர்கள் தருமருக்கு

# நமது கடமை

ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் மிகவும்கறைபடிந்த ஓர் அத்தியாயம்செப்டெம்பர்2ஆந்திகதி நடந்த, எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத கொலைகளாகும் தமக்கென வாழாது தமிழினத்துக்காகவே வாழ்ந்த இருபெருந் தலைவர்களான திரு தருமலிங்கமும் திரு. ஆலாலசுந்தரமும் சிங்கள இன வெறியர்களின் குண்டுக்குப் பலியாகவில்லை. சிங்கள இராணுவத்தினரால் கொலை செய்யப்படவில்லை தமிழனுக்காக தம் வாழ்நாளை அர்ப்பபணித்த இத்தலைவர்கள் தமிழனாலேயே படுகொலை செய்யப்பட்டார்கள் என்று எண்ணும்போது ஒவ்வொரு தமிழனும் வெட்கத்தினால் தலைகுனிய வேண்டிய நிலையை இப்பாதகச் செயலைச் செய்தவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள்.

தமிழ் இனத்தையே விற்று இனக்கொலையைச் செய்து வரும் ஆட்சியோடு ஒத்துழைத்து வரும் கயவர்கள் துரோகிகள் அல்ல இலட்சியத்தைக் கைவிடாது, சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்துத் தம் பதவிகளைத் துறந்து, தமது தொழிலைத் துறந்து, தியாக சீலராக வாழ்ந்த தலைவர்கள் 'காட்டிக் கொடுப்பவர்கள்'' என்று பட்டம் சூட்டப்பெற்று படுகொலை செய்து நடுத்தெருவில் வீசப்பட்டவேண்டியவர்கள் - என்றால் நமது சிந்தனையில் என்ன கோளாறு என்று ஆராயப்படவேண்டும்.

தமிழ்ப்போராளிகள் தாம் யாருக்காவது தண்டனை வழங்கினால் தமது செயலுக்குப் பகிரங்கமாக உரிமை கொண்டாடி வந்தார்கள். இந்தப் படுகொலையைச் செய்தவர்களும் அவர்களில் ஒரு குழுவினர் என்பதில் ஐயமில்லை. வேறு யாரோ செய்தார் என்று யார் தலையிலாவது பழியைப் போடுவது பயங்கொள்ளித்தனம் ஏன் வந்தது இக கோழைத் தனம்? மக்கள் மன்றத்தில் நியாயமற்ற இக்கொலைகளைச் செய்த தாங்களே துரோகிகளாக நிறுத்தப்படுவார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணம்

ஈழத்தமிழ் மக்களின் இதயத்தில் தமக்கென்று தனியிடம் பெற்ற தலைவர்கள் திரு. தர்மலிங்கமும் திரு ஆலால சுந்தரமுமாவர். செல்வக் குடும்பத்தில் பிறந்ததிரு தர்மலிங்கம் இளம் வயதிலேயே இடதுசாரிக் கொள்கைகளாற் கவரப்பட்டார். சாதிக்கொடுமையை உடைத்தெறியத் துணிந்து செயற்பட்டார். திரு. தர்மலிங்கத்தின் பொது வாழ்கை உடுவில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகவும் பின் தலைவராகவும ஆரம்பித்தது 1952ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி முதல் தேர்தலில் இறங்கியபோது காங்கேசன்துறைத்தொகுதியில் திரு. செல்வநாயகத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் தலைமைதாங்கினார். 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள வெறியாட்டம் ஆரம்பமான பின் தமிழரசுக்கட்சியோடு நெருங்கி உழைக்கத் தொடங்கினார். 1958இல் சிங்கள 'ஸ்ரீ'எதிர்ப்பு மொழிப் போராட்டத்தில் கைதியாகி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். 1960ஆம் ஆண்டு உடுவில் தொகுதி உறுப்பினராக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப் பெற்றார். 1983இல் சத்தி ப் பிரமாணம் செய்ய மறுத்துத் தம் பதவியைத் துறக்கும் வரை 23 ஆண்டுகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் திரு தர்மலிங்கத்தின் குரல் ஒலித்தது.

1972 ஆம் ஆண்டின் பின் தமிழ்மக்களின் விடுதலைக் கிளர்ச்சி தீவிரமடையத் தொடங்கியபோது பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு எவ்விதவிசாரணையுமின்றிப்பல வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் தமிழ் இளைஞர்களுக்கு எதிராகக் காவல் துறையினர் மேற்கொண்ட கொடிய சித்திரவதைகளைப் பாராளுமன்றத்தில் எடுத்து முழங்கி உலகின் கவனத்தைக் கவருவதிலும். சர்வதேச மன்னிப்புச் சபையோடு தொடர்பு கொண்டு அவர்களின் விடுதலைக்காக உழைப்பதிலும், சிறைப்பட்ட இளைஞர்களின் குடும்பங்களை ஒவ்வொரு மாதமும் போய்ப் பார்த்து அவர்களுக்கு உதவி வழங்குவதிலும் முன்னணியில் நின்று உழைத்தார் இந்த உழைப்புக்குப் பரிசு கொலைஞனின் துப்பாக்கிக் குண்டா?

தமிழ்மொழி உரிமைக்காகத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக இலங்கைத் தமிழரசுக்கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் மேற்கொண்ட அறவழிப் போராட்டங்களில் எல்லாம் பங்கு கொண்டார். சிறை சென்றார். 1961-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கச்சேரியில் மறியற் போராட்டத்தில் நாம் ஈடுபட்டபோது காவல் துறையினரின் குண்டாந்தடியால் தலையிற் காயமேற்பட்டு

1951ம் ஆண்டு யாழ் மாநகர சபைத்தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி முதன்முதலிற் போட்டியிட்டபோது எமது தேர்தல் மேடைகளில் ஒரு சிறுவன் அழகபன அடுக்கு மொழியில் ஆணித்தரமாகப் பேசினன் அதுவே ஆலாலின் அரசியற் பிரவேசமாகும். பதினைந்து வயதில் ஆரம்பித்த இலட்சியப்பணி இறுதிமூச்சு வரை தொடர்ந்தது பேச்சாளனக, நாடகாசிரியராக, நடிகனக, செயல் வீரனகத் தமிழ்இன உணர்வை வளர்ப்பதில், தமிழ்ப் பகைவர்களைச் சாடுவதில் தம்பி ஆலால் தன்னிகரற்று விளங்கினார். ஆலால் பேச வருகிறார் என்றால் இரவு இரண்டு மணியானலும் மக்கள் காத்திருப்பார்கள். அவருடைய அழகிய பேச்சுப் பகைவரைக் கொடுஞ் சரங்களாகத் தாக்கும்.

தமிழ் இளைஞர்கள் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்த கட்டத்தில் திரு. ஆலாலசுந்த



இரத்தம் பாய்ந்தோட நின்ற தருமரின் கோலம் இன்றும் என் மனக்கண்முன் நிற்கின்றது. ஆட்சியாளரின் குண்டாந்தடி பதம்பார்த்த அதே தலையில் ஒரு தமிழ்க் கொலைஞனின் ண்டு பாய்ந்ததென்று எண்ணும்போது பதைக்காத நெஞ்சம் தமிழ் நெஞ்சமா?

முக்கியமான விடயங்கள் எதையிட்டாவது முடிவு எடுக்க வேண்டும். அறிக்கை தயாரிக்க வேண்டுமாயின் நாம் திரு. தர்மலிங்கத்தின் உதவியை, ஆலோசனையை நாடுவது வழக்கம். 1971ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைகு இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் ஓர் இணைபாட்சிக்கான திட்டம் சமர்ப்பிக்கும் பொறுப்பு திரு. தர்மலிங்கத்திடமே விடப்படடது. எக்கருமத்தை எடுத்தாலும் கடமை உணர்ச்சியோடு செய்து முடிக்கும் தனிப்பண்பு பெற்றவர் தர்மர் கடமை, கண்ணியம், கட்டுப் பாடு என்ற மூன்று குணங்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய அத்தலைவர் விட்டுச் சென்ற இடைவெளியை நிரப்ப வல்லார் யார்,

என் அன்பு இளவல் ஆலால சுந்தரத்தைப்பற்றி எழுதும் போது கைபதறுகின்றது. ரம் தீவிர பொலிஸ் கண்காணிப்பிற்கு ஆளானர். அவர் பல தடவை விசாரிக்கப் பட்டார். அவருடைய வீடு பலமுறை சோதனையிடப்பட்டது. தேடப்பட்ட பல இளைஞர்கள் அவருடைய வீட்டிற் புகலிடம் பெற்றனர். அவர்களில் பலருக்கு உணவு கொடுத்து உபசரித்தார் அவருடைய அன்புத் துணைவியார். இளைஞர்களின் செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்தது அக்குடும்பம். அப்படி வாழ்ந்த இளங்குடும்பத்திற்கு இக்கதி என்றால் நன்றி மறந்த கயவர் கூட்டம் யாரைத்தான் தப்பவிடுவர்கள்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இராணுவத்தினர் இழைக்கும் கொடுமைகளையெல்லாம் திரட்டி எனக்குத் தொலைபேசிமூலம் கொடுப்பவராக இருந்தவர். திரு ஆலால சுந்தரம் ஆவர். அவர் கொடுத்த விபரங்களைக் கொண்டே இங்கு பத்திரிகைகளுக்கோ செய்தி நிறுவனங்களுக்கோ நாம் இலங்கை அரசின் பொய்ப் பிரச்சாரத்தை மறுத்து அறிக்கைகள் கொடுக்கக் கூடியதாக இருந்தது. இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புகூட பல நாட்களாகப் பழுதற்றிருந்த தமது தொலைபேசி சீர்செய்யப்பட்டவுடன் பேசினார். எமக்கும் லோங்கோவாலின் கதி ஏற்படுமென்று இயக்கப் பெயர் இல்லாமல் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள்பற்றியும் தெருக்கூத்துக்களிலும் அதே கருத்துக் கூறப்பட்டதுபற்றியும் வேதனையோடு கூறினார். இங்கும் 'நியூஸ் டைம்' என்ற பத்திரிகைகருத் தன் பெயரை வெளியிட வேண்டாம் என்று ஒரு தீவிரவாதி அதே விதமான செய்தி கொடுத்திருந்தார். இந்த இரு தலைவர்களின் படுகொலைக்கும் இவற்

**அ. அமிர்தலிங்கம்**

**த. வி. கூ. செயலதிபர்**

றுக்கும் தொடர்புண்டா என்பதை, இப்போது மறுக்குப் இயக்கங்கள் ஆராயக் கடமைப்பட்டிருக்கின்றன மறைந்த இத்தலைவர்களுக்கு விடுதலை இயக்கங்கள் எல்லாம் செய்ய வேண்டிய ஒரு பெருங் கடமை இக்கொடிய செயலுக்குப் பொறுப்பானவர்களை இனங்கண்டு மக்கள் மன்றத்தில் நிறுத்துவதாகும்.

சோதனை மிகுந்த இக்கால கட்டத்தில் தமிழ் இனத்தில் பரிபூரண ஒற்றுமை நிலவ வேண்டிய நேரத்தில் பொறுப்பற்ற சிலரின் இச்செயல் எமது இனத்தில் மேலும் பிரிவினையை ஏற்படுத்த இடங்கொடுக்கக் கூடாது ஆனல் ஒற்றுமையின் பேரில் கொலைஞர்களை மூடிமறைக்கும் முயற்சிாம் கூடாது. பிழையை ஏற்றுக் கொண்டு பொறுப்பானவர்களைத் தண்டிக்கும் தைரியம் விடுதலை இயக்கங்களுக்கு வேண்டும். அஃதில்லைய யின் அதுவே இயக்கங்களை நாளடைவில் அழித்துவிடும்.

தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இனவிடுதலைக்கே அர்ப்பணித்த இருபெருந் தலைவர்களுக்கு நாம் செய்யும் ஒரே கைம்மாறு அவர்களுடைய இலட்சியக் கனவை நனவாக்க, நலிவுற்ற தமிழினத்தின் வாழ்வு வளம்பெற. வீடிழந்து, நாடுவிட்டு அகதிகளாக வெளியேறிய தமிழ் மக்கள் நம் நாடு மீண்டும் வாழ்வுபெறச் சிங்களக் கொடுங்கோலிலிருந்து தமிழினம் விடுதலைபெற்றுத் தலை நிமிர்ந்து வாழ, வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உழைப்பதேயாகும்.

தர்மர், ஆலால் நாம
வாழ்க!
தமிழ் ஈழம் மலர்க!

நன்றி: நினை

## "வஞ்ச
## தமிழ்
## நெஞ்ச

வெள்ளத்தனையது
மலர் நீட்டம்
தம் உள்ளத்த

என்கிறான் வான்புகழ்
வன் ஒரு மனிதனின்
செல்வத்தினாலோ செல்
னாலோ மட்டும் தங்கி
வில்லை. அவனது உய
தீர்மானிப்பதுஅவனது
பண்புகளே! "பெருமை
ஏனைச்சிறுமைக்கும் தத்
மமேகட்டளைக்கல்என்ற
ஒருவனுடைய பெருமை
மைகளை அவனது செய
தீர்மானிக்கின்றன என
எடுத்துக் காட்டுகின்
உயர்ந்த உள்ளம் கொ
வர்கள் செயற்கரிய
களைச் செய்து பெரிய
என்ற பெருமைக்கு உரி
விடுகிறார்கள்.

தன் தாயகத்து ம
நேசித்து தணியாத விடு
தாகப் கொண்டுழைத்து
சார்ந்திருந்த இலட்
சளுக்கு செயல்வடிவம்
த்து ஈற்றில் தன் தா
மண்ணையே தன் செ
யாற் சிவக்க வைத்த
தருமலிங்கம் அவர்கள்
ளத்துச் சிந்தனைகளாலு
ரிய செயல்களாலும்
மக்கள் மத்தியில் மட்டு
முற்போக்குச் சிந்
கொண்ட பொரும்பா
இனத்தவர் மத்தியிலும்
மைக்குரியவராக உ
நின்றார். ஒருவன் எ
காலம் வாழ்ந்தான் எ
முக்கியமல்ல. அவன்
சாதித்தான் என்பத
முக்கியம். ஒருவனுடை
னைகள் அவனுக்கு மக்கள்
தியில் மறக்கவொண்ணா
தைக் கொடுக்கிறது.
தன் தொகுதி மக்கள
மட்டுமன்றி தமிழீழ ம

---

## தங்கத் தமிழ்த்தலைவன் தருமனைக் காண்பதெப்போ?

—கவிஞர் க. பொ. நடனசிகாமணி

அன்பு அறிவாற்றலுக்கு அரசியலுக் கென்ன
ஆலயத்துத் திருப்பணிக்கு அறப்பணிக்கு என்ன
பண்பு பகுத்தறிவுக்கு பரிவுக்கு என்ன
பணிவுக்கு துணிவுக்கு கனிவுக்கு என்ன
என்னகுறை எவர் சொன்னபோது மதைமறந்து
எழில்தமிழர் உயர்வுக்கு உழைப்பதற்கு என்ன
என்னருமை அண்ணன் தங்கத் தருமனுக்கு நிகராய்
ஏற்றமிகு தலைவனை நாம்எங் கினிமேல் காண்போம்!

மன்னவனுய் மாளிகையில் வாழ வழியிருந்தும்
மக்களன்பு மிக்கவனுய் மக்களிடை வாழ்ந்து
வன்சிறையில் வாடிய எம்தம்பியர்க்கு எல்லாம்
வாழ்வளிக்க வளங்கள் பல வழங்கிவந்த வள்ளல்!
தன்குடும்பம் சொந்துசுகம் தமிழுக்சேயீந்த
தன்மானத் தமிழ்த்தலைவன் தருமன்தான் என்பேன்!
நன்றிகெட்ட நாய்களவருயிர் மாய்த்தபோதும்
நன்றி சொல்வோரவர் புகழை நாடறியச்செய்தார்!

கல்விக் கூடங்களின் கட்டிடத்தில் வீற்றிருப்பாய்
கலையரங்கில் விளையாட்டுக் களங்களெலாம்
வீற்றிருப்பாய்
தெல்லியூர் துர்க்கையம்மன் தூபியெலாம் வீற்றிருப்பாய்
தெருவிலுள்ள வீட்டிலுள்ள விளக்கெல்லாம்
வீற்றிருப்பாய்
அல்லல்பட்டேழைகளின் அகங்களெலாம் வீற்றிருப்பாய்
அருந்தமிழர் குழந்தைகளின் மழலையெலாம்
வீற்றிருப்பாய்
மெல்லெனவே மலர்ந்துவரும் தமிழீழப் பூங்காவின்
மேன்மை மிகுநறுமலராய் நீ என்றும் வீற்றிருப்பாய்!

---

## தருமர் புகழ் நீடு நின்று வாழியவே!

சாத்திரத்திற் சண்டதென்று வாய்பசப்பிக் கைவிரி
வாய்த்தரும ரளவன்றிச் செயல்தரும ரானநிலை
பார்த்துவக்கக் கொடுத்துவையாப் பாவமிகு மிவ்வு
நீத்தகன்ற தருமர்புகழ் நீடுநின்று வாழியவே!

அறியதநல் வாழ்வியலும் அரசியலும் அவை கிடக்க
மனிதவியல் மாண்பாலே மக்களுளம் பிணித்திருந்த
தனியொருவர் தருமலிங்கம் தமிழன்பர் தண்ணளி
நனநாக ரீகரவர் நலம்போற்றும் நானிலமே.

உரிமைப் போரில் தமையிறக்கி
உயிரை பணயம் வைத்தாடும்
உலக சமூகம் அனைத்தினுக்கும்
ஓராங் கொலிக்கக் குரலெழுப்பும்
அருமை உரையால் தன்னேக்கின்
அகலம் காட்டி ஈழத்தில்
அடிமைத் தளைவிட் டெறியஅழல்
அணிசே ரிளைஞர்க் காமளவு
பரிவுந் தகவுந் தண்ணளியும்
பயில்நா கரிக நங்காட்டிப்
பாரா தரிக்கும் அரசியலிற்
பகட்டுப் புரட்டும் சதிகளறத்
தருமம் புகலா மளவினுக்குத்
தானே யளவு கோலான
தரும லிங்கப் புகழொளியில்
தானே மலருந் தமிழீழம்!

–ச. 

# ...நுக்கும் ஆலாலுக்கும் ஓராண்டு அஞ்சலி (2-9-1986)

## ...பஞ்சத்தால் வீழ்ந்தாலும் ...மிழ் மக்கள் ...நஞ்சத்தில் வாழ்கிறன்'

வள்ளத்தனையது
மலர் நீட்டம் மாந்தர்
தம் உள்ளத்தனையது
உயர்வு

ன் வான்புகழ் வள்ளு ...ரு மனிதனின் உயர்ச்சி ...த்தினுலோ செல்வாக்கி ... மட்டும் தங்கி நிற்க ... அவனது உயர்வைத் ...ரிப்பதுஅவனதுஉள்ளப் ...ளே! ''பெருமைக்கும் ...றுமைக்கும் தத்தம்கரு ...ட லேக்கல்என்றவாக்கு ...டைய பெருமை சிறு ... அவனது செயல்களே ...ரிக்கின்றன என்பதை ... காட்டுகின்றன. ... உள்ளம் கொண்ட ... செயற்கரிய செயல் ...செய்து பெரியவர்கள் ...பருமைக்கு உரித்தாகி ...ர்கள்.

... தாயகத்து மண்ணை ... தணியாத விடுதலைத் ...கொண்டுழைத்து தான் ...ருந்த இலட்சியங் ... செயல்வடிவம் கொடு ...றில் தன் தாயகத்து ...யே தன் செங்குருதி ...வக்க வைத்த அமரர் ...ங்கம் அவர்கள் உள் ...சிந்தனைகளாலும், உய ...யல்களாலும் தமிழீழ ...மத்தியில் மட்டுமன்றி ...க்குச் சிந்தனை ... பொரும்பான்மை ...வர் மத்தியிலும் பெரு ...யவராக உயர்ந்து ... ஒருவன் எத்தனை ... வாழ்ந்தான் என்பது ...ல்ல. அவன் என்ன ...ான் என்பதுதான் ...ம். ஒருவனுடைய சாத ...அவனுக்கு மக்கள் மத் ...றக்கவொண்ணு இடத் ...கொடுக்கிறது. தருமர் ...தொகுதி மக்களுக்காக ...ன்றி தமிழீழ மக்களுக்

காகவும் இலங்கையடங்கிலும் வாழுகின்ற பாட்டாளி மக்கள் அனைவருக்குமாகக் குரல் கொடுத்தார். பெருமைக்குரிய செல்வச் செழிப்புடைய குடும்பத்திலே பிறந்தபோதிலும் தற்பெருமை சிறிதுமில்லாத நற்பெருங் குணத்தோனுய் அவர் விளங்கினர். காவிய நாயகனுன தருமனின் இனிய குணங்கள் அப்பெயர்கொண்ட எங்கள் தருமரிடம் நிறைந்திருந்தன. எளிமைக்கு அவர் ஏற்றதோர் எடுத்துக்காட்டு. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமை சிறிதுமில்லாதவராக எவருடனும் இனிமையாகப் பழகும் இயல்புடைய அவர் தன்னிலும் இளையவரோடும் தோழமையுடையவராக தோளிற் கை போட்டுப் பழகும் பண்புடையவர். எவரும் அவரை எளி

சி. சிவமகாராசா
(தலைவர்,
தேசியகூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்.)

தில் அணுகித் தமது பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும்.

'.ஊருணி நீர் நிறைந்தற்றே
உலகம் பேரறிவாளன் திரு''

என்றகூற்றுக்குத்தருமர் எடுத்துக்காட்டாக விளங்கினர். அரசியலுக்கு வந்தவுடன் செழிப்படையும் சில அரசியல்வாதிகள் போலன்றி கறைபடியாக் கரம் கொண்ட தருமர் நிதிய மெல்லாம் படிப்படியாய்க் குறைந்திடும் அளவுக்குப் பொதுவாழ்விற் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1970—1977 ஆண்டு காலப்பகுதியில் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளும் அவரது செயற்பாடுகளும் சிறந்த அரசியல் அறிஞன் அவர் என்பதை எடுத்துக் காட்டின. சர்வதேச அரசியல் விடயங்களில் ஆழ்ந்த அறிவுகொண்ட அவக பொதுவுடமைக் கருத்துக்களின்பால் இளமை தொட்டே ஆழ்ந்த ஈடுபாடும் பற்றும் கொண்டிருந்தார். அவரை ஒரு ''கம்யூனிஸ்ட்''

(8-ம் பக்கம் பார்க்க)

...பதேயாகும்.
..., ஆலால் நாமம்
...!
... ஈழம் மலர்க!

நன்றி: நினைவுமலர்

## ...டு ...ழியவே!

...பசப்பிக் கைவிரியா
...ம ரானநிலை
...பாவமிகு மிவ்வுலகை
...வாழியவே!

...ம் அவை கிடக்க
...ம் பிணித்திருந்த
...பர் தண்ணளியார்
...ானிலமே.

...கி
...நாடும்
...ம்
...லழுப்பும்
...க்கின்

...அழல்
...ளவு

...டிப்

...ளறத்

...ம்!

– ச. பே.

# இதயக் குமுறல்

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

ஈழத்துத் தமிழரின் உரிமைப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றில் பல தலைவர்களை இழந்துவிட்டோம். அவர்களின் மறைவிற்கு வருந்தினேம். கண்ணீர் விட்டோம். மனிதனுகப்பிறப்பவன் ஒருநாள் இறக்கத்தான்வேண்டுமென்று ஆறுதலடைந்தோம். ஆனல், இனிய நண்பர்கள் - தர்மலிங்கத்தினதும் ஆலாலசுந்தரத்தினதும் - படுகொலைச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம், அதிர்ச்சியடைந்தோம், வேதனைப்பட்டோம், மனம் குமுறினேம், ஆத்திரப்பட்டோம்.

1966இல் பாரதத்தின் சில பகுதிகளில் இந்தியர் இந்தியரைக் கொன்ற நேரத்தில் மறைந்த பாரதப்பிரதமர், அன்னை இந்திரா காந்தி மனக் குமுறலுடன் கூறினர். 'என் கண்களில் கண்ணீர் இல்லை. எனது இதயத்தில் ஆத்தரம் தான் உண்டு. இதற்காகவா, எண்ணற்ற தியாகிகள் தங்கள் உயிர்களைக் கொடுத்தார்கள்? இப்படியான சம்பவங்கள் நடைபெறும் பொழுது இந்தியா ஒரு பெருமைமிக்க நாடு என்று எப்படி நன் பெருமிதத்துடன் கூறமுடியும்?''

இந்த உணர்வுதான் எனக்கும் ஏற்பட்டது. தமிழனைத் தமிழன் கொன்ருல், நாம் ஓர் இனம்! அந்த இனம் சுதந்திரமாக வாழவேண்டும் தமிழ் இனம் பண்பில் வளர்ந்த இனம். நாம் நீதிக்குப்போராடுகிறும் என்று எப்படிக் கூற முடியும்?


இந்த இருவரின் உயிர்களைப் பறித்த பாதகச் செயலுக்குப் பொறுப்பானவர்கள் எப்படியான தலைவர்களைக் கொல்கிறேம் என்று சிறிதளவிலாவது சிந்தித்தார்களா? சிந்தித்திருந்தால், இந்தக் கொடூரமான, மன்னிக்க முடியாத செயலைச் செய்திருக்கமாட்டார்கள்.

இந்த இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைசிறந்த தலைவர்கள். தங்கள் உழைப்பால், தியாகத்தால், கொள்கைப் பிடிப்பால், திறமையால் தமிழ் மக்களின் இதயங்களில் இனிய இடத்தைப் பெற்றவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தங்களை முற்று முழுதாக அர்ப்பணித்துச் சொல்லொணு இன்னல்களையும், இழப்புக்களையும் துன்பங்களையும்உறுதியுடன் ஏற்றுக்கொண்ட நல்ல தொண்டர்கள்.

அமரர் தர்மலிங்கம் ஒரு சிறந்த பண்பாளன் நேர்மையின் உறைவிடம் ஆங்கிலத்தில் கூறுவதென்ருல் - He is a Perfect Gentleman வசதியான குடும்பத்தில் பிறந்தவர். அவர் விரும்பினுல், அரசியலுக்கு வராமல், தானும் தன் குடும்பமும் சீரோடும் சிறப்போடும் நன்ருக வாழ்ந்திருக்கலாம ஆனல் அவர் மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு அரசியலில் புகுந்தார். முதலில் கிராமசபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் ஊழக்குப் பிரசித்தி பெற்ற இநதப் பதவியில், நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்நது மிகமிகச் சிறந்த சேவையைத் தன்னுடைய கிராமத்துக்குச் செய்தார். இந்தப்பதவியில் இருக்கும் பொழுது, மக்களுக்குச் சிறந்த சேவை செய்ய, அரசியல் அதிகாரம் எம் மக்கள் கையில் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து, அதே நோக்குடன் செயல்பட்ட தமிழரசுக்கட்சியில் சேர்ந்தார் மிகவிரைவில் தமது நேர்மையால், முயற்சியால் அந்தக் கட்சியின் முன்னணித்தலைவராக உயர்ந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அவரின் நாடாளுமன்றப் பேச்சுக்களில் மூன்று கருத்துக்கள் என்றும் தொனிக்கும். தமிழ் உணர்வு,

மு. சிவசிதம்பரம்
தலைவர் த. வி. கூட்டணி

(8ம் பக்கம் பார்க்க)



## நிலைக்கும் நினைவுகள்

திரு. வி. தருமலிங்கம் அவர்கள் மறக்க முடியாத மாண்பினர். அவரது மனிதாபிமானச் செம்மையும் மக்கட் சேவை உறுதிப்பாடும் நீண்ட காலம் போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அவருடைய பேச்சிலும் எழுத்திலும் தொனிக்கும் நயத்தக்க நாகரிகத்தை நினைந்து நினைந்து பார்க்கிறேன் தமிழ்மக்களின் விடுதலைபற்றி அவர் கொண்டிருந்த பற்றுறுதியினை எண்ணி எண்ணிப் பார்க்கிறேன்.

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்
யாழ், பல்கலைக்கழகம்

தருமலிங்கம் அவர்கள் மாண்புமிக்க ஒரு மனிதர்.

அவரிடமிருந்த பண்புகளுள் மூன்று முக்கியமானவையென கருதுகிறேன்:

முதலாவது அவர் மக்களிடத்து வைத்திருந்த நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை கிராம மட்டத்தில் அவரைக் காட்சிக்கு எளியராக மக்கள் மனம் திறந்து உரையாடத் தக்கவராக வைத்திருந்தது; சர்வதேச மட்டத்திலோ அவரை இந்நம்பிக்கை சமதர்ம நாடுகளின் நண்பனுக, சோசலிசப் போராட்டங்களின் ஆதரவாளனுக வைத்திருந்தது

தருமலிங்கம் அவர்களின் மிகச் சிறந்த பண்பு அவரது அறிவு வேட்டையாகும் தான் ஈடுபட்டுள்ள எந்த விடயம் பற்றியும் நிறைய வாசித்தறிந்து அந்தப் பின்னணியிலேயே தனது நிலைப் பாட்டினை வரித்துக் கொள்ளும் பண்பு அவரிடத்திருந்தது

தருலிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் வன்மையுடன் எழுதும் ஆற்றல் வாய்ந்தவர் தனது நெஞ்சத்தால் பேசும் அந்தி போந்நியமன பேச்சு நடையைக் கொண்டவர்.

தருமலிங்கம் அவர்களின் மறைவு ஈடுசெய்யப்படமுடியாத ஒன்று அன்பேயுருவான ஒரு தலைவனை இழந்துள்ளகுடும்பத்துக்கு என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நினைவு நீண்ட நாள் நிலைக்கும்.

நன்றி: நினைவுமலர்

## அமரர் ஆலால் அவர்கள்

தந்தை செல்வநாயகத்தின் அரசியற் பிரவேசம் ஈழத் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். தமிழரின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் நன்கறிந்த இவர் தமிழர் சுய கௌரவத்துடன் இநநாட்டில் வாழுவதற்கு சமஷ்டி ஆட்சி முறையும் தமிழரின தாயகத்தில் ஒரு சுயாட்சியுமே சிறந்ததென்ற அரசியற் சித்தாந்தத்தை முன் வைத்து, கால் நூற்றாண்டு அரசியல் நடவடிக்கைகளுக்குப் பின்னர் 'சுதந்திர தாயகமே தமிழருக்கு விடிவு தரும் எனவும் முழங்கிச் சென்றுர்

சந்தர்ப்பவாதத்திலும், அதன் வழிபபிறந்த அரசியற் சித்தாந்த தெளிவின்மையிலும் ஊறிய சமுதாய தநதையின் தீர்க்கதரிசனக் கருத்துக்களுக்குச் செவி மடுக்கப் பலகாலம் எடுத்தது: இக்கால கட்டத்திற்குள் பல்வகை எதிர்ப்புக்கள் மத்தியில், தந்தையின் நடவடிக்கை ளுககுப் பக்கபலமாக நின்று உழைத்து தம் வாழ்வையே அர்ப்பணித்தவர்கள் பலர் உளர் இவர்களில் அமரர் மு. ஆலாலசுந்தரமும் ஒருவராவார் மிக இளவயதிலே தந்தையின் சித்தாந்தத்தில் ஈடுபாடுகொண்ட இவர் அன்றைய தமிழரசுக்கட்சியின் மேடைகளில் தோன்றிய முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவராகி ''இரட்டைக்குழல் துப்பாக்கி'' எனவும புகழ் பெற்றவர். வெறும பேச்சாளனுக மட்டும் இவர் பணி அமையவில்லை: கட்சியின் நிர்வாகஸ்தராகவும் நின்று அவர் கட்சிக்கு ஆற்றிய சேவை அளப்பரியது: நீண்டகாலம் இவ்வாறு உழைத்த தமக்குப் பரிசாகப் பாராளுமன்றக் கதிரை கிடைக்கவில்லையே என மனம் நொந்து கட்சியை விட்டுச் செல்லவுமில்லை: இவ்வாறு சென்றவர்கள் பலர்; பாராளுமன்றம் சென்றும் மறு அணிககுத் தாவியவரும் பலர்.

சி. க. சிற்றம்பலம்
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

கோமான் வன்னிய சிங்கத்தாலும் சிந்தனைச்சிற்பி கதிரவேற்பிள்ளையாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட. கோப்பாய்த் தொகுதியை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறப்பும் இவருக்குக் கிட்டியது எனினும் இவரால் முழுப் பாராளுமன்றக் காலத்தைக்கூடப் பூர்த்தி செய்ய முடியவில்லை காரணம் 1983 இல் நடைபெற்ற இனக்கலவரமும் அதனைத் தொடர்ந்து வந்த அரசின் ஆருவது அரசமைப்புக் திருத்தமுமேயாகும்; இதனுல் நாட்டின் ஏனைய பாராளுமன்றப் பிரதிநிதிகள் அனுபவிக்கும் சலுகைகளையும் சலாக்கியங்களையும தமிழ்ப் பிரதிநிதிகள் இழக்க நேரிட்டது, இதுமட்டுமன்றி இக்கால கட்டத்தில் அரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்தாற்ருன் ஆலாலசுந்தரம் அவர்கள் நியாய துரந்தரராகவும் தம் தொழிலை நடாத்த முடியும் என்ற நியதியும் இருந்தது: இவ்வாறு விசுவாசப் பிரமாணம் செய்து தொழிலை நடத்திய கடசிப் பிரமுகர்கள் பலர்; ஆனல் ஆலாலசுந்தரம் அவர்கள் அவ்வாறு செய்யாது தம் தொழில் மூலம் கிட்டும் வருமானததையும் இழந்தார்.

1983 இனக்கலவரம் தமிழ் மக்களின் வாழ்வில் மட்டுமன்றித் தமிழ்பிரதிநிதிகள் வாழவிலும் சோதனைகளையும், வேதனைகளையும் ஏற்படுத்திய காலகட்டத்தின் தொடக்கமாயுமமைநதது. அரசியற் தலைவர்கள் தமிழகம் செல்லும் அவசியம் ஏற்பட, இங்கிருந்தஏனையோர் செயலிழந்தனர் இக்காலகட்டத்தில் மிகமிகத்துடிதுடிப்புடன் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி மீது கொண்டிருந்த நம்பிக்கை சிதறடிக்கப்படாது பாதுகாத்த

(8-ம் பக்கம் பார்க்க

# அன்பனுக்கு அன்பன்

## "அடலேறு" ஆலாலசுந்தரம் அவர்கள்

இலட்சியமில்லாத மனித வாழ்வு அத்திவாரம் இல்லாத கட்டடம் போன்று. பிறருக்கு மட்டுமல்ல தனக்கும் கூடப் பயனற்றதாய் ஆட்டம் கண்டு விடுகிறது. ஆனல் இலட்சிய மனிதர்கள் மக்களுக்காக வாழ்ந்து மடிந்து மக்கள்மனதிலே நீங்காத இடம்பெற்று வாழ்கிருர்கள். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இன்னல்களுக்குள்ளாகி வாழ்ந்து வரும் தமிழ் ஈழமக்களின்வாழ்வோடு தன்னைப்பின்னிப் பிணைத்து, பிரிக்கமுடியாதவாறு வாழ்ந்து காட்டிய அமரர் ஆலாலசுந்தரமும் அவ்வாறே. தமிழ்மக்கள் இதயங்களிலெல்லாம் நிறைந்து வாழ்கிருர். இன உணர்வும், மொழிப் பற்றும் அமரர் ஆலாலசுந்தரத்தின் இரு கண்களாக விளங்கின. தன் ஒளிமயமான எதிர்காலத்தைப்பற்றி சிறிதேனும் கருத்திற் கொள்ளாமல் இன்றைக்குப் பலஆண்டுகளுக்கு முன் இன விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட தமிழரசுப் பாசறையில் தன்னையும் இணைத்துக்கொண்டு சுகபோகங்களைத் துறந்து, தன்னலமற்றதோர் சேவையில் தன்வாழ்வையே அர்ப்பணித்தவர் அடலேறு ஆலாலசுந்தரம்.

இயல்பாகக் கிளர்ந்தெழுந்த இனமொழி உணர்வுகளால் உந்தப்பட்டு அமரர் வன்னியசிங்கம் போன்ற மூத்த தலைவர்களின் பின்னே சின்னஞ்சிறுவனுக நடைபயின்ருர். அமரர் ஆலாலசுந்தரம் சுவரொட்டிகள் ஒட்டி, ஒலிபெருக்கிகள்கட்டி, தொண்டர்களைக் கூட்டி, அடிமட்டத் தொண்டனுக தன் அரசியல்வாழ்வினை ஆரம்பித்து படிப்படியாகத் தலைவராக உயர்ந்தவர். இலட்சியம் என்னும்ஏணிப்படிகளில் நிதானமாகவும், அமைதியாகவும் தன் சின்னஞ்சிறு பாதங்களைப் பதித்து உயர்வடைந்த உத்தமன் அவன் மக்களின் ஆதரவு அலையாகஅவன்பக்கம் வீசியபோதும் தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதவிதரப்படவில்லையே என்ற ஆதங்கம் கொண்டு கட்சியின் கட்டுப்பாடுகளை எக்காலத்திலும் அவன் மீறினனில்லை.

"சொல்லலவல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவன் குறளுக்கு இலக்கணமாக விளங்கிய அமரர் ஆலாலசுந்தரம் மேடையில் கோடையிடியாக முழங்கி இன உணர்வினை மக்கள இதயங்களிலே விதைத்தான் அவனது நாவன்மை சுயநல மிக்க அரசியல் வாதிகளின் அத்திவாரத்தையே ஆட்டம் காணவைத்தது தமிழ் ஈழத்திலே அவன்குரல் ஒலிக்காத மூலைமுடுக்குகளே இல்லை. ஆலாலசுந்தரம் பேசுகிருனென்ருலே கூட்டம் அலைமோதும். கவர்ச்சியானதோற்றம் எதிரியையும் வசியப்படுத்தும் புன்சிரிப்பு அரிய வாதங்களை அடுக்கடுக்காக முன்வைக்கும் நாவன்மை, கேட்போரைக் கிறங்கவைக்கும் குரல்வளம், "அடலேறு" என்ற அடைமொழிக்கு இவை போகாதா? தமிழ் மக்கள் மத்தியிலே முதல்முதலாக "கேள்வி பதில்" நிகழ்ச்சியினைப் பிரபலப்படுத்தியவர் அமரர் ஆலாலசுந்தரம் அவர்களே.

பாடசாலை நாட்களிலேயே அமரர்ஆலாலசுந்தரம் பேச்சுக்கலையிலும், நாடகக்கலையிலும் இயல்பான ஊக்கமுள்ளவராகத் திகழ்ந்தார். செங்குந்தா இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி என்பன இவரைப்பழையமாணவர் எனக் கொள்வதில் பெருமையடையும். கல்லூரிப்படிப்பினை முடித்துக்கொண்டு பூனு நவரோஜி வாடியா கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் தனது மேற்படிப்பைத் தொடர்ந்த போதும் வரப்பிரசாதமாகக் கிடைத்த பேச்சுக் கலையையும் நாடகக் கலையையும் வளர்க்க அவர் தவறியதேயில்லை. பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்த போதும் தன் நாவன்மையால் பெரியதோர் கூட்டத்தையே தன் பின்னல் கொண்டிருந்தார். பட்டப் படிப்பினை முடித்தபின்னரும் வாளைவிடப் பேனமுனை கூரியது என்பதையுணர்ந்து பல நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியதோடு அவற்றில் நடிக்கவும் செய்து மக்கள் மத்தியிலே ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்திஞர். நாடகங்கள் மூலம் சமூகத்தின் அடிமட்டப் பிரச்னைகளை எடுத்துக்கூறி அவற்றிற்கான பரிகாரங்களையும் தன் நாடகங்கள்மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தார். இயல்பாகவே அமையப்பெற்ற நகைச்சுவை உணர்வு சமூகப் பிரச்னைகளை சர்வசாதாரணமாக மக்களுக்கு விளக்க இவருக்கு உறுதுணையாகவிருந்தது.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதையுணர்ந்து கூட்டுறவுத் துறையிலும் தன் கவனத்தைச் செலுத்தி பணிபல ஆற்றிநின்ருர் அமரர் ஆலாலசுந்தரம் தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டத் தலைவராக இருந்து யாழ், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகப் பணிபுரிந்த வேளையில் இவரின் முயற்சியால் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் இவரின் சேவையின் நினைவுச் சின்னமாக என்றென்றும் நிலைத்திருக்கும். தொழிலாளர் நலன்காக்க இலங்கைத் தொழிலாளர் சழகத்திலும் இலங்கை பஸ் தொழிலாளர் சழகத்திலும் தலைவராகப்பணியாற்றி தன் வாதத் திறமையினல் தொழிலாளர்களின் காவலனுக விளங்கினர். அதுமட்டுமல்ல தன் சொல்வன்மையாலும் சட்ட நுணுக்க ஆற்றலாலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்ஞர், முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களில் தன்நிகரில்லாத சட்டவாதியாகவும் விளங்கிப் புகழ்பெற்ருர்.

தான் வாழ்ந்த கல்வியங்காட்டுப் பகுதியில் இளைஞர்களுக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாக இவர் விளங்கினுர் இளைஞர் கூட்டமொன்று இவரின் நாவன்மையில் சொக்கி எப்போதுமே பின்னல் இருந்து கொண்டிருந்தது நல்லூர் மக்கள் சனசமூக நிலையம். வன்னிய சிங்கம் படிப்பகம் என்பன இவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் திறம்பட இயங்கிக் கொண்டிருக்கின்றன

எப்போதோ கிடைக்க வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர் பதவி காலந்தாழ்ந்தே இவரை வந்தடைந்தபோதும் இவரது பாராளுமன்றக் கன்னிப் பேச்சே அங்குள்ள உறுப்பினர்களை மூக்கின்மேல் விரலை வைத்து வியப்படையச் செய்தது. பல உறுப்பினர்கள் "குட்டிப்புலி" பாராளுமன்றத்துக்குள் வந்துவிட்டது என்று கூச்சல் கூடப் போட்டார்கள் பாராளுமன்ற உறுப்பினராகிக் குறுகிய காலத்துக்குள்ளேயே பலருக்கு 'அடலேறு' சிம்ம சொப்பனமாக விளங்கினுர். ஆனல்

இலட்சியங்கள் நிறைவேறு
முன், ஏனென்றே
தெரியாமல் இனந்தெரியாத
வர்களின்
துப்பாக்கிக் குண்டினை நெஞ்சி
லேந்தி - தான்
வாழ்ந்த மண்ணிலேயே அமர
ரானுர் ஆலாலசுந்தரம்
மார்தட்டி மார்தட்டி மக்கள்
பணியென்று மாடாய் உழைத்
ததற்கோ
மார்பிலே சூடேற்று மண்ணு
லகைத்
துறந்தாய் நீ ......

தமிழ் மக்கள் உள்ளவரை அமரர் ஆலாலசுந்தரத்தின் நினைவுகளும் அவர்கள் நெஞ்சங்களில் நீங்கா இடப்பெறும் அவர் அமரராகி ஓராண்டு பூர்த்தியடைந்த இந்நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காக யாபேரும் பிரார்த்திப்போம்

**பெ. கனகசபாபதி,**
தலைவர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வஞ்சத் தால்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

எனறு குறிப்பிடுமளவிற்கு முற்போக்குணர்வு கொண்டவராக அதனைச் செயலிற் காட்டிய சிந்தனையாளர் அவர்.

கூட்டுறவுத்துறை அவர் இதயங் கவர்ந்த இனிய துறையாகும். வடபகுதிக் கூட்டுறவு இயக்கத்தில் அவர் மிகுந்த ஈடுபாடுகாட்டி வந்துள்ளார். கூட்டுறவு நிறுவனங்கள் நெருக்கடியை எதிர் நோக்கியிருந்த வேளையில், தனிநபர் கொள்கைகளால் அவை பாதிக்கப்பட்ட வேளையில் கூட்டுறவு இயக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தி ஆற்றிய பிரச்சாரங்கள் என்றும் பசுமையாக நிலைத்துநிற்கும்.

சிரித்த முகம், இனித்த சொற்கள், அனைவரையும் அணைத்த கரம், வஞ்சமில்லாக் குழந்தை நெஞ்சம், அங்கே வைரம் பாய்ந்த கொள்கைப்பற்று, காழ்ப்புடனே நோக்குகின்ற எதிர்ப்பாளரையும் கனிவுடனே நோக்குகின்ற நன்னினிய பரந்த பண்பு இத்தனையும் கொண்ட இனிய மகன் வஞ்சத்தால் வீழ்ந்தாலும் அவன் தமிழீழ மக்கள் தம்நெஞ்சத்தில் என்றும் நேசத்துக்குரியவனய் வாழ்வான்.

# ஓராண்டு நினைவஞ்சலி

## 2-9-86 செவ்வாய்க்கிழமை

### நிகழ்ச்சிகள்

காலை 7-45 மணி: தாவடியில் நினைவுஸ்தூபிக்கு மலரஞ்சலி.

மு ப. 10-00 மணி: தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள்.

பகல் 12-00 மணி: துர்க்காபுரம் அன்னபூரணி மண்டபத்தில் அன்னதானம்.

பி. ப. 3-00 மணி: உடுவில் உள்ளூராட்சி மன்றத்தில் நினைவுச் சின்னம் திரைநீக்கம் திரு. சி. சிவமகாராசா அவர்கள் (யாழ் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர்).

பி.ப. 3-3 மணி: நினைவஞ்சலிக்கூட்டம் (இராமநாதன் கல்லூரி மண்டபம்) தலைவர்: திரு. ச. முத்துலிங்கம் (முன்னள் உடுவில் உள்ளூராட்சிமன்றம்), முதன்மை விருந்தினர்: திரு. வை. மு பஞ்சலிங்கம் அவர்கள் யாழ். அரசாங்க அதிபர்). தலைவர்: திரு முத்துலிங்கம் அவர்கள் (முன்னுள் உடுவில் உள்ளூராட்சி மன்றத்தலைவர்)

# ஓராண்டு நினைவஞ்சலி

## 02-09-1986 செவ்வாய்க்கிழமை

### நிகழ்ச்சிகள்

காலை 10-00 கல்வியங்காடு பேச்சி அம்பாள் ஆலயத்தில் பிரார்த்தனை.

காலை 11-00 நினைவுரைகள்

பகல் 12-00 மணி அன்னதானம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

நல்லூர். அமரர் ஆலாலசுந்தரம் நினைவுச்சபை.

# இதயக் குமுறல்—

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சமதர்மக் கொள்கை, இந்தியாவுடனும் மற்ற சோசலிச நாடுகளுடனும் நட்பு உலக ஏகாதிபத்தியத்தின் நவகொலோனியல் போக்கை எதிர்த்துப் பலமுறை நாடாளுமன்றத்தில் குரல்எழுப்பியுள்ளார். இஸ்ரேலின் சியோனிச ஆக்கிரமிப்புக்கு எதிராக, அராபிய நாடுகள், எகிப்தில் நடத்திய கண்டன மாநாட்டில் கலந்து சிறப்புரை ஆற்றியுள்ளார்.

சிங்களக் கொடுங்கோல் ஆட்சியில் எமது இளைஞர்களைச் சிறையில் நீண்ட காலமாக அடைத்துச் சித்திரவதை செய்தபொழுது அவர்கள் குடும்பங்களுககு மாதாமாதம் ஆறுதலும் பண உதவியும் செய்து வந்தார்.

இப்படியான ஒரு நல்ல தமிழனை சமதர்மவாதியை, கருணை உள்ளம் படைத்த தர்மரை இழந்து தவிக்கிருேம்.

அமரர் ஆலாலசுந்தரம் துடிப்புள்ள, துணிவு நிறைந்த செயலாற்றல் மிக்க, என்றும் இளைஞனுகக் காட்சியளிக்கும் நல்ல மனிதன். பேச்சாற்றல் கடவுள் அவருக்குக் கொடுத்த கொடை. இளம் வயதிலேயே தமிழரசிக்கட்சி மேடையில், தமிழ் மற்றும் சுதந்திர வேட்கையும் முற்போக்குச் கருத்துக்களும் ததும்பும் காரசாரமான உரைகள் நிகழ்த்திஞர். பேச்சளவில் நின்றுவிடவில்லை. அவரின் செயல் திறமையைப் பாராட்டாத தலைவர்கள் இல்லை. "முடியாது" என்ற சொல் அமரர் ஆலாலசுந்தரத்தின் அகராதியில் இல்லை.

தொழிற்சங்கத் தொண்டு அவரின் தனிச் சிறப்புவாய்ந்த தொண்டு, தொழிலாளர் நண்பர்களை ஒன்று சேர்த்து சங்கம் அமைத்து அவர்களின் நலன் காத்து அவர்களின் உரிமைகளைத் தமது வாதத் திறமையால் வென்றெடுத்து சிறந்த தொழிற்சங்கத் தலைவரெனப் பெயரெடுத்துத் திகழ்ந்தார்.

அமரர் ஒரு சிறந்த வழக்கறிஞர். தொழிற்சங்கச் சட்டத்தில் போற்றத்தக்க தேர்ச்சி பெற்றவர். நமது இளைஞர் பொய்யான குற்றச்சாட்டின் பேரில், நீதிமன்றங்களில் நிறுத்தப்படும்பொழுது, அவர்களுக்காகஇலவசமாக வாதாடி அவர்களைப் பலமுறை மீட்டிருக்கிருர்.

தொழிலாளர் நண்பன் இளைஞர்களின் தோழன், செயல் வீரன், சிறப்புமிக்க பேச்சாளன், அன்பு நிறைந்த உள்ளமுடையவர். இவைகள் தான் அமரர் ஆலாலசுந்தரத்தின் சிறப்புக்குணங்கள். எல்லோரும் அன்பாக 'ஆலால்' என்று அழைக்கும் அவரின் மறைவு தமிழ்மக்களின் பேரிழப்பு

நாம் எமது இனத்தின் சரித்திரத்தில் மிக இக்கட்டான காலகட்டத்தில் உள்ளோம். இந்த நேரத்தில் நமக்குள் துவேஷத்தையும், மனக்கசப்பையும், பூசலையும், வேற்றுமையையும் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுதல், நமது தலையில் நாமே மண்ணைப் போடுவதாக முடியும். இந்தக் கொலைகள் அப்படிப்பட்ட செயல்களே;

தர்மர், ஆலால் என்றும் தமிழ்மக்கள் மனங்களில் வாழ்வார்கள்.

வாழ்க இவர்கள் நாமம்! வெல்க அவர்கள் பணி!

நன்றி: நினைவுமலர்

# அமரர் ஆலால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமை ஆலாலுக்குத்தான் உண்டு. அவரது இல்லம் பல காலமாகவே கட்சியின் உத்தியோகப்பற்றுள்ள காரியாலயமாகியது யாழ்.நகரிலுள்ள கூட்டணித் தலைமைச் செயலகம் எரிக்கப்பட்டபின்னர் தலைமைச் செயலகமாகவும் இவரில்லம் மாறியது இக்காலத்துக்குள் அரசின் இராணுவ நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன; மக்கள் பல அனர்த்தங்களை அனுபவிக்கவேண்டியிருந்தது. இவ்வனர்த்தங்களையெல்லாம் பார்க்கவந்தவெளி உலக பத்திரிகையாளர்களுக்கெல்லாம் கட்சியின் நடவடிக்கைகளை, மக்களின் இன்னல்களை விளக்குவதில் முன்நின்றவர் அமரர் ஆலாலசுந்தரம் அவர்களே தம்மைத் தேடிவந்த எவரையேனும் இன்முகத்துடன் அழைத்து ஆவனசெய்தவர்இவர் இங்குநடைபெற்ற அனர்த்தங்களை உடனுக்குடன் அரசின் கவனத்திற்கும், சென்னையிலுள்ள தலைவர்களுக்கும் எடுத்து சொல்லிய வரும் இவரேயாவார் இதனல்இருவக்கேற்பட்ட சிரமங்களும பலவாகும்.

தாமுண்டு, தம்குடும்பமுண்டு என்றுவாழாது, கட்சி தடைசெய்யப்பட்ட பின்னரும் ஒதுங்கி இராது, முன்னையவிட சுறுசுறுப்பாகச் செயற்பட்டவர் ஆலால். இவருக்குக் கட்சியின் ஏனைய பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கிடைத்த சாலாக்கியங்கள்கூடம் கிடைக்கவில்லை. இவ்வாறு இனவிடுதலைக்கு உழைத்த ஆலால் போன்ற ஒரு தொண்டனின் நினைவை அழியவிடாது நினைவுகூறுவதானறே நாம் அவரது பணிகளுக்காற்றும் உண்மையான அஞ்சலியாகும்.

## இன்னல் துடைப்பார் எவர்?

நீண்ட புகழார் மரபினிலே
நிலைபெற் றுயர்ந்து
தமிழருக்காய்
ஆண்டு பலநற் சேவையினில்
அயரா துழைத்த
ஆலாலே!
வேண்டி உனது வழிகாட்டல்
விழையுஞ் சமூகம் பரிதவிக்க
யாண்டு சென்ருய்?
இனியெங்கள்
இன்னல் துடைப்பார்
யாருளரே.

— ப. சு.

# செனித் மார்க்கட்டிங் & அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

### ஸ்தாபனத்தாரின்

## 3வதுவருட நிறைவு தொடரும் 4வதுவருடம்

எமது ஆதரவாளர்கள், நண்பர்கள் முக்கியமாக எமது நலனில் அக்கறை கொண்ட வியாபாரிகள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் இத்தனை நாள் வழங்கிவந்த நல்லாதரவுக்கும் தொடர்ந்து இதே நல் ஆதரவை வழங்கி வரவேண்டுமென பகிர்ந்து கொண்டு முதற்கண் கைகூப்பி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது விளம்பர சேவையும் விநியோக சேவையும் எல்லோருக்கும் தெரியும். கடந்த 83 (ஜூலை) ஆடிக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இங்கு வந்து பல இன்னல்களுக்கு மத்தியில் ஒரு சில நல்லுள்ளமும் அன்பும் கொண்ட இதயங்களின் ஏக்கத்தாகம் 'செனித்' இன்று எமது உள்ளூர் உற்பத்திப் பொருட்களை முக்கியமாக தோலகட்டி தயாரிப்புகளையும், பனம் பொருள் தயாரிப்புகளையும் லாபநோக்கம் கருதாது ஈழம்வாழ் மக்களுக்கு விநியோகம் செய்து வருவதால் இதயமகிழ்ச்சி அடைகின்றது 'செனித்' தொடர்ந்து பரந்த சேவையை நிறைந்த மனத்தோடு செய்வதற்கு உறுதிகொள்கின்றது 'செனித்.'

வியாபாரிகள் வாடிக்கையாளர்களுக்கு செனித்தின்

## முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புகளின் ஏகப் பிரதிநிதிகள் ஜோ. எகட்டன் (JOE EGERTON) செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஆகிய நாங்களே! எங்களைத் தவிர வேறொருவரும் தோலகட்டி தயாரிப்புகளை விநியோகம் செய்வதற்கு நியமிக்கப்படவில்லை என்பதை அன்புசால் வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம். அசல் தோலகட்டி தயாரிப்புக்களை கவனித்து வாங்கவும். ஜோ. எகட்டன் வாரந்தோறும் உங்கள் தேவைகளுக்கு உங்களைச் சந்திப்பார். உங்கள் தேவைகளுக்கு அவரை நாடுங்கள்

1-9-1986 முதல் பனம் பொருள் அபிவிருத்தி சபையின் சகலவிதமான தயாரிப்புக்களுக்கும் யாழ் குடாநாடு முழுவதும் விநியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதனை இவ்வேளையில் மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எமது காட்சி அறையும் விற்பனை நிலையமும் யாழ். பீச் இன் இல 139 கடற்கரை வீதியில் அமைந்துள்ளது என்பதனை வாடிக்கையாளர்கள் பாவனையாளருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதுமையின் உறைவிடம் செனித்! தொடர்ந்து ஆதரவு நல்குவீர்!

செனித் - யாழ். நகர்

## தோலகட்டி தயாரிப்புகளை யாழ்நகரில் மொத்தமாக பெற்றுக்கொள்ள

வரணி மிசன் பாம்
(விற்பனை நிலையம்)
145. நவீனசந்தை,
யாழ். நகர்.

S. சுப்பிரமணியம் and கோ
53, K. K. S. வீதி,
யாழ் நகர்
தொலைபேசி 23541

M. P. வீரவாகு அன் கோ
மின்சார நிலைய வீதி,
யாழ். நகர்

பனம்பொருள் அபிவிருத்தி சபையின் எல்லா 'கற்பகம்' விற்பனை நிலையங்களிலும்.

### யாழ்நகரில் சில்லறையாகப் பெற்றுக்கொள்ள

**கச்சேரியடி**
அனித்தா Y.M.C.A கட்டிடம்,
கண்ணன் ஸ்ரோர்ஸ்
நியூ லக்கி ஸ்டோர்ஸ்

**சுண்டுக்குழி**
செறில்ஸ்
கந்தசாமி ஸ்டோர்ஸ்

**மெயின் வீதி**
சண்முகம் டிரேடர்ஸ்
யாழ் டிரேடிங்
அமுதினி ஸ்டோர்ஸ்
அண்ணாசாமிப்பிள்ளை and கோ

விற்பனைத்திணைக்கள மக்கள் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மின்சாரநிலைய வீதி**
M P. வீரவாகு and கோ.
பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்
ஐடியல் எசன்ஸ் ஹவுஸ்
R G ஸ்டோர்ஸ்
மகோ ஸ்டோர்ஸ்
முகமதலி - அப்துலலி
சுப்பையா and கோ (மதுபான விற்பனை நிலையம்)
ரவர் கூல் அன்ட் கோப்பிபார்
ராமர் மாளிகை
சுந்தரம் and கோ (மருந்துக்கடை)

**கஸ்தூரியார் வீதி**
கோலா கூலா கோப்பி பார்
ராஜூ ஸ்டோர்ஸ்
அருணாசலம்பிள்ளை அன் கோ
வேலுப்பிள்ளை அன் கோ
மலாயன் பேக்ஹவுஸ்
பரிமளா பீடாஸ்டோர்ஸ்

**கடற்கரை வீதி**
யாழ். பீச் இன்
குமார் ஸ்டோர்ஸ்

**கொழும்புத்துறை**
கிறிஸ்க்கா கூல்பார்
தேவி ஸ்டோர்ஸ் [கொய்யாத்தோட்டம்]

**தட்டாரத்தெரு**
நாகேஷ்வரி ஸ்டோர்ஸ்
நியூலக்கி சென்ரர்

**நல்லூர்**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
டிப்-டொப் சுப்பர் மார்க்கட்

**சோமசுந்தரம் வீதி**
நியூசந்திரா ஸ்டோர்ஸ்

**பாஷையூர் புனித அந்தோனியார் வீதி**
டொமஸ் (Toms)
புனிதவளன் களஞ்சியம்

**சின்னக்கடை (குருநகர்)**
பெமலி காடின்ஸ்
சத்தியா ஸ்டோர்ஸ்
மாணிக்கம் ஸ்டோாஸ்
கமலா ஸ்டோர்ஸ்
சிவசக்தி ஸ்டோாஸ்

**நாவலர் வீதி**
பெமலி சொப்
மல்டி சென்ரர் [கலீபா அப்துல்காதர் வீதி]

**பெரியகடை**
சிறீ சாயி ஸ்டோர்ஸ்
குகன் ஸ்டோர்ஸ்
ரட்ணம் பார்மசி அன்ட் குரேசரீஸ்
சங்கரப்பிள்ளை அன்ட் பிறதர்ஸ்
அண்ணா கோப்பிக்கடை

லைடன் ரீ ஸ்டோர்ஸ்
நியூமுருகேசு ஸ்டோர்ஸ்
கநதையாப்பிள்ளை அன்ட் கோ.
நாகதர்சினி ஸ்டோர்ஸ்
வடிவேல் அன்ட் சன்ஸ்

**ஆஸ்பத்திரி வீதி**
சிட்டி மெடிக்கல்ஸ்
சிங்கப்பூர் பார்மசி
R V G மெடிக்கல்ஸ்
ஆதிம் பாய்
T. சண்முகநாதன் அன் கோ
குணரத்தினம் ஸ்டோர்ஸ்
யோகு டிரேடிங்கோ
ராஜா கோப்பிரேசன்
அம்பாள் ஸ்டோர்ஸ்
ஸ்ரீ ராமகிருஷ்ணாஸ்
கௌரி போம்றஜ் ஸ்டோர்ஸ்
சியாமளா
மொடன் மெடிக்கல்ஸ்
S M K மெடிக்கல்ஸ்
சிட்டி மெடிக்கல் ஹோல்
பொம்பே ஜெய் சுவீட்ஸ் (Bombay Jai Sweets)
ஹோட்டல் றெலக்ஸ்
பேரம்பலம் அன்ட் சன்ஸ்
நியூ முருகேசு ஸ்டோர்ஸ்
அன்னராஜா அன்ட் கோ
ஸ்ரீ தாமோதர விலாஸ்

[வேறு பெயர்கள் விடப்பட்டிருந்தால் அடுத்த வெளியீட்டில் தொடரும் வெளியூர் வாடிக்கையாளர்கள் பெயர்கள் விபரம் (

## ஜோ. எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், யாழ் நகர்

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாரீர்.
மீண்டும் சந்திப்போம்! அதுவரை மாதளம்!! [A 1213]

---

## பிரயாண ஒழுங்குகள்

### டென்மார்க், கிறீஸ், கனடா, அவுஸ்ரேலியா, ஜேர்மன், பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு மிகக் குறைந்த செலவில் குறித்த விலாசத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், ரிக்கற்றிங் துரித கதியில் செய்து கொடுக்கப்படும்.

# AIR PEOPLES

(Hotel Gnanams)
299, CLOCK TOWER ROAD,
JAFFNA. (C 4340)

---

# ஆங்கிலம்

படிக்கிறீர்களா?

143 பக்கங்களே கொண்ட

# LEARNER'S ENGLISH

## (லேணேர்ஸ் இங்கிலிஷ்)

என்னும் நூலை ஆங்கிலம்தெரிந்த ஒருவரின் உதவியுடன் கற்றுத் தேறுவீர்களேயாயின், ஆங்கில மொழியில் எழுதவும், வாசிக்கவும், பேசவும் உங்களுக்கு நல்லதகுதி ஏற்படுவது நிச்சயம்! தமிழிலேயே விளக்கக்குறிப்புகள் இருப்பது உங்களுக்கு நல்ல வாய்ப்பு!

★ இது ஒரு 'வரதர் வெளியீடு'

★ இதுபோன்றநூல் இதுவரை வெளிவந்ததில்லை.

விலை ரூபா 16/-

எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

★ நல்லூர் திருவிழா அமைப்பிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் கிடைக்கும். [A-1210]

---

# பிரயாண சேவை

### சேவ்ரி ரவல்ஸ் தாபனத்தாரின்

யாழ் — கொழும்பு — யழ்

பஸ் சேவை தொடர்ந்தும் வழமைபோல் நடைபெறுகின்றது.

இப்போது ஒருவழிக்கட்டணம் 150/- மட்டுமே.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடம்:

1. சேவ்ரி ரவல்ஸ் காரியாலயம்,
   102. 3ம் குறுக்கு வீதி,
   யாழ்ப்பாணம்.
   T P 22742
2. ரட்ணம் பார்மஸி அன் குரேஷறி
   ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   T. P 22769
3. சேகர் மோட்டோஸ்
   ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
4. ஞானம்ஸ் ஹோட்டல்
   மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
   T. P. 22082

தூரஇட பிரயாணிகள் வசதிக்காக எமது ஆசனப் பதிவுகளையும் தங்குமிட வசதிகளையும் ஞானம்ஸ் ஹோட்டலில் செய்து கொள்ளலாம்.

# சேவ்ரி ரவல்ஸ்

ஸ்தாபனத்தார்

(A 1211)

### அமெரிக்கா தெரிவித்துள்ள———

# குற்றச்சாட்டை நிரூபிக்கும்படி லிபியா வற்புறுத்துகிறது

திரிப்பொலி, ஆகஸ்ட் 31

**ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தாங்கள் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு லிபியா அமெரிக்காவிற்கு சவால்விட்டுள்ளது.**

அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றும் இந்தவிடயத்தில் சர்வதேச நீதிமன்றம் ஒன்றின் மத்தியஸ்தத்தையும் முடிவையும் தமது நாடு ஏற்றுக்கொள்ளும் என்றும் லிபியாவின் துணைத்தலைவர் மேஜர் அப்துல் சலாம்யாலேர் திரிப்பொலியில் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளை தண்டிப்பதில் வாஷிங்டனுடன் ஒத்துழைக்க திரிப்பொலி தயார் என்றும் அதேசமயம் தனது பிராந்தியத்தின் மீது நடத்தப்படும் எந்தத் தாக்குதலையும் எதிர்க்கவும் தாம் தயாராகவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினர். (ஒ)

---

## இந்திய, சிம்பாப்வே பிரதமர்கள் சந்திப்பு

லண்டன்: ஆகஸ்ட் 31

8வது மண்டலசார்பற்ற உச்சிமாநாட்டிற்கு முன்னதாக மண்டலசார்பற்ற நாடுகளுக்குள்ள முக்கியமான பிரச்னைகள் குறித்து ஹராரேயில் பாரத—ஸிம்பாப்வே பிரதமமந்திரிகள் பேச்சு நடத்தியிருக்கிறார்கள்.

திரு ராஜீவ் காந்தியும், திரு. றெபேட் முகாபேயும் சுமார் 90 நிமிடங்கள் வரை பேச்சுக்கள் நடத்தினர்கள்.

மண்டலசார்பின்மை இயக்கத்தின் தலைவர் தனக்கு அடுத்தபடி அந்தப் பதவியை ஏற்கவிருக்கும் பேச்சுக்கள் என்ற அளவுடன் அவர்களது சந்திப்பு நின்றுவிடவில்லை. தென்னபிரிக்கா பின்பற்றும் இனஒதுக்கல் கொள்கையின் விளைவினல் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு எடுக்கவேண்டிய முனைப்பான நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் விவாதித்தார்கள். (ஒ)

---

## இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 16 1986-9-01]
கிழமை- திங்கள்
திதி- துவாதசி மு. ப. வரை
நக்ஷத்திரம்- பூசம்
பி. இ. வரை

மேடம்- தொழில்துறையில் சில மாற்றங்கள்ஏற்படலாம். பதவியிலும் உயர்வுண்டு. பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம்.

இடபம்- இன்று ஆதாயம் கிடைக்கும். புதுத்தொழில் முறைகளை மனம் நாடும். நீண்ட பயணத்திற்கும் இடமேற்படலாம்.

மிதுனம்- பகைவர்கள் பதுங்குவர். பாதையில் பழுதுண்டு. நம்பிக்கை மோசடிமூலம் பணமும் பறிபோகலாம்.

கடகம்- நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும். கடன்தீரும். உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர்.

சிங்கம்- நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும் பொன்னனதினம்

கன்னி- மனக் கவலைகளுக்கு இடமுண்டு. கடமையில் தடையேற்படும். மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

துலாம்- மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமுமுண்டு.

விருச்சிகம்- இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனக் கொண்டாட்டங்களும் புத்திரசுகமும், தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும்.

தனுசு- அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தோன்றும். வீணன சிந்தனைகளில் சோர்வு தென்படும்.

மகரம்- இல்லத்தில்இனிமை தவழும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். இனபந்துக்களால் உதவியுமுண்டு.

கும்பம்- நண்பர்களுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். பொருட் செலவுமுண்டு.

மீனம்- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப் பணியில் கவனம் செலுத்தவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

### பாகிஸ்தான்

## மக்கள் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் புதிய கட்சியொன்றை அமைத்தனர்

உலகச் செய்திகள்

லாகூர், ஆகஸ்ட் 31

பாகிஸ்தான் மக்கள் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற தலைவர்கள் லாகூரில் நடத்திய மாநாடொன்றில் புதிய தேசிய மக்கள் கட்சி ஒன்றை அமைத்துள்ளார்கள்.

பல முன்னள் கவர்னர்கள், முதலமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் உட்பட சுமார் 1500 பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் புதிய கட்சியின் தலைவராக திரு. குலாம் முஸ்தாபா யத்தாய் தெரிவுசெய்யப்பட்டார்.

பாகிஸ்தான் பிரதமமந்திரி திரு. யுனேயேயையும், செல்வி பெனஸிர் பூட்டோவையும் தாக்கிப் பேசிய திரு யத்தாய் புதிய கட்சி இவர்கள் இருவரையும் எதிர்த்துப் போராடும் என்று தெரிவித்தார்.

இதேவேளை பாரதத்திடமிருந்து செல்வி பெனஸிர் பூட்டோ உதவி பெறுகிறார் என்ற குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் நிரூபிக்குமாறு பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஹான் அப்துல் வலிக்கான் ஜெனரல் ஸியாவுல் ஹக்கை கேட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரம் இல்லையென்றால் அதிபர் ஸியா எதிர்க்கட்சித் தலைவர்களை குறைகூறக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

---

## பதற்றம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியில் கடந்த மூன்று மாதங்களாக நிலவிவரும் பதற்ற நிலைமையைத் தொடர்ந்து கிளிநொச்சி நகரில் வசித்துவந்த பெருந்தொகையானேர் இராமநாதபுரத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனர். மற்றும் ஒரு பகுதி மக்கள் வட்டக்கச்சிக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். [எ]

---

### இலங்கை அரசுடன் நடத்தப்படும்———

# பேச்சுக்களில் சேர்ந்துகொள்ளுமாறு போராளிகளையும் கூட்டணி கோருமாம்

## சென்னை திரும்பிய பின் அமிர் தகவல்

சென்னை, ஆகஸ்ட் 31

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் முகமாக இலங்கை அரசுடன் தாம் நடத்தும் பேச்சுக்களில் சேர்ந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழ்ப் போராளிகள் அமைப்புகளை கேட்டுக்கொள்ளப்போவதாக, கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்றிரவு சென்னை வந்து சேர்ந்த திரு, அமிர்தலிங்கம் விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் பேசுகையில் இலங்கை அரசுடன் நடத்தும் பேச்சுக்களில் போராளிகளின் அமைப்புகளையும் ஈடுபடுத்துவது அவசியம் என்று த. வி. கூட்டணி கருதுவதாகவும், இலங்கை அரசுடன் பேச்சு நடத்திவிட்டு வந்த கூட்டணிக்குழு இலங்கை அரசுடன் தாம் நடத்திய பேச்சுக்களால் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து இவ்வமைப்புகளிடம் எடுத்துரைக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை அரசு தெரிவித்துள்ள யோசனைகள் சம்பந்தமாக விரிவான ஒப்பந்தம் எதுவும் இன்னமும் ஏற்படவில்லையென்றும் த வி கூட்டணியின் ''பொலிட்பீரோ'' சென்னையில் கூடி எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கும் என்றும் அதன்பின்னர் முன்னணித் தலைவர்கள் இந்திய அரசுடன் ஆலோசனை நடத்துவதற்கென புதுடில்லி செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மற்ற இலங்கைத் தமிழ் அமைப்புக்களையும் கலந்து ஆலோசித்த பின்னரே இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுநடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்கள் வெளிப்படையானவையாகவும் விரிவானவையாகவும் இருந்தன என்றும் அதிகாரப் பகிர்வு, சட்டம், ஒழுங்கு நிர்வாகம், வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது சம்பந்தப்பட்டவை ஆகிய அரசியல் சட்ட அமைப்புப் பணிகள் உள்ளிட்ட விடயங்கள் விவாதிக்கப்பட்டன என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [ஒ]


### பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். [A-1029]



### பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜெர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.**

**குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

**GROUP ATLANTIC**
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)

## பெரியாரின் சேவை

அமரர் வேலாயுதம் பெரிய தம்பி சிங்கப்பூரில் உயர்ந்த பதவி வகித்த பின்னர் இலங்கைக்குத் திரும்பிவந்து தனது சொந்த ஊரான வடமராட்சிப் பகுதியில் திக்கம் என்ற கிராமத்தில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வந்தார். இவர் மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பல சேவைகளை தனது கிராமத்திற்கு செய்துள்ளார். உதாரணமாக: திக்கத்திற்கு ஒரு சந்தையில்லாமல் மக்கள் கஷ்டப்படுவதைப் பார்த்த அவர் 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சந்தை வேண்டும் என்று மனசிசெய்தார். இவரது விண்ணப்பத்தை அரசு ஏற்க முடியாத நிலையிலிருந்த காலத்தில் இவர் தான் எடுத்த முயற்சியைக் கைவிடாது தமக்குச் சொந்தமான காணியை சந்தை ஸ்தாபிப்பதற்கு கொடுத்து பிரத்தியேகமான இச்சந்தையை ஸ்தாபிப்பதற்கு வழிவகைகள் மேற்கொண்டார். இச்சந்தையில் மக்கள் பல பலன்களை அனுபவிக்கக் கூடியதாக இருந்தது இச்சந்தையை அரசு சந்தையாக அங்கீகரித்தது. அது மட்டுமல்லாது அக்கிராமத்திற்கு வைத்தியசாலை வேண்டும் என்று கேட்டு அவர் காலத்திலேயே பெற்றுக் கொடுத்தார். அத்துடன் தபால் அலுவலகம் இல்லாத குறையையும் அவர் நிவர்த்தி செய்தார். இவர் அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் அரசியல் வழி நின்று அவரின் பாராட்டுதல்களையும் பெற்றிருந்தார். கட்டைவேலி கிராமச் சபைக்கு தலைவராகவும் பணியாற்றினர், இன்று அன்னாரின் நினைவுதினம், அவர் வழி நாமும் நின்று அவர் பணி நாமும் புரிவோம்.

ஓர் அன்பன்

## “ஷப்ரு” கிண்ணக் கிரிக்கெட்:
# ‘ஜொனியன்ஸ்’ சாம்பியன்
# சூரி - மகிந்தா அபார ஆட்டம்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 25-வது வெள்ளிவிழாவை முன்னிட்டு, ''ஷப்ரு'' வெற்றிக் கிண்ணத்துக்காக நடாத்தப்பட்ட, மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்போட்டியில், ஜெனியன்ஸ் கழகம் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது.

ஜொலி ஸ்டார்ஸ் கழகத்துக்கும், ஜொனியன்ஸ் கழகத்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற சாம்பியன் மோதலில், முதலில் துடுப்பெடுத்தாடிய ''ஜொலி ஸ்டார்ஸ்'' கழகம், 38 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 159 ஓட்டங்களைப் பெற்றது.

''ஜொனியன்ஸ்'' கழகம் 37 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 163 ஓட்டங்களைப்பெற்றது. இக்கழகம் ஒரு கட்டத்தில 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 39 ஓட்டங்களை மட்டுமேபெற்றிருந்தது இதன் பின் சோடிகளான காப்டன் சூரிய குமாரும், மகிந்தாவும் சிறப்பாகவும் - வேகமாகவும் துடுப்பெடுத்தாடி தமது ஓட்டங்களின் எண்ணிக்கையை 143 ஆக உயர்த்தியபோது, சூரிய குமார் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார், மகிந்தா ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்படி இரு வீரர்களின் துடுப்பாட்டம், மைதானத்தை சுற்றியிருந்த பெரும் திரளான ரசிகர்கள் கூட்டத்துக்கு பெரும் விருந்தாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி. ஸ்ரீரங்கநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். [வி]

### அமரர் ஆலாலசுந்தரம்--

(4-ம் பக்கத் தொடர்ச்சி)


அன்னதானமும் இடம் பெறும். அகதி மக்களுக்கும் விசேடமாக அன்னதானம் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

கல்வியங்காடு மக்கள் சன சமூகநிலையத்தில் அமரர் ஆலாலசுந்தரத்தின் உருவப் படம் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

[ச-ஒ-ஆ]

### 65-வது நாள் கண்ணீர் அஞ்சலி

சுழிபுரம் மேற்கு
செல்வன்
வயிரமுத்து
சைலகாந்தன்



அன்னை மடியில்:
21-7-66

ஆண்டவன் மடியில்:
29-6-86

எங்கள் குடும்பக் குல விளக்கே எம்மை எல்லாம் வாழவைப்பாய் வழிகாட்டுவாய், உறு துணையாய் இருப்பாய் என்று நாம் கட்டிய கோட்டைகள் கண்ட கனவுகள் எண்ணிய எண்ணங்கள் தான் எவ்வளவு! வீட்டையும் காத்து நாட்டுக்கும் உதவுவேன் என்று நட்டைக்காக்க சென்ற செல்வா! உனது பயணம் தொடரும் வேளையில் அரச கூலிப் படையினரின் தாக்குதலுக்குள்ளாகி எம்மை விட்டுப் பிரிந்த துயர் எம் நெஞ்சை வாட்டுகின்றது. உமது துணிவும் தியாகமும் எமக்கு சிறப்பாக அமைந்தலும் உம்பிரிவை எம்மால் தாங்கமுடியாது

உமது பிரிவில் தவிக்கும்: தாய் சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

[C4362]

## தவறிவிட்டது

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைச்சேர்ந்த கந்தசாமி பால சரவணபவன் ஆகிய எனது அடையாள அட்டை யாழ்நகரில் நேற்று தவறி விட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அமுத சுரபி சைவ உணவகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C 4364)


**லிடோ**

காலை 10-30, 2-30, 4-30, 6-30

பாக்கியராஜ்-அம்பிகா நடித்த

**அந்த 7 நாட்கள்**

[கலர், புதிய பிரதி]

**வெலிங்டன்**

வெள்ளித்திரையில்

10-30, 2-30, 4-30 6-30

ரிக்டானிக் கப்பலின் மீட்பு நடவடிக்கை உண்மைச் சம்பவம்.

RAISE THE TITANIC

**வின்ஸர்**

வெண்திரையில்

10-30, 2-30, 6 30

ரஜனி-ராதா-ஜெய்-சில்க்- Y.G மகேந்திரன்-விஜயகுமார் நடித்த

**துடிக்கும் கரங்கள்**

பயங்கரச் சண்டைகள், இனிய பாடல்கள், நெஞ்சத்தைக் குளுகுளுக்க வைக்கும் காதல் அத்தனையும் நிறைந்த அற்புத ஓவியம் கடைசி முறையாகக் காண்பிக்கப்படும் புதிய பிரதி.


### கொழும்பு---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னராம்.

பின்னர் அவர்களை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்று விடுகின்றனரென்று தெரிவிக்கப்பட்டது.

பல காலம் ஐரோப்பிய நாடொன்றில் பணிபுரிந்த வடபகுதி தமிழ் இளைஞரொருவர் மீண்டும் பிரஸ்தாப நாட்டிற்குச் செல்ல கொழும்பு முகவர் நிலயத்தை நாடியபோது அவரையும் இந்த வலையில் சிக்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த இளைஞர் சாதுரியமாக இவர்களது பிடியிலிருந்து தப்பியதாகக் கூறப்படுகிறது.

### வடமராட்சி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லத்துரை தர்மராஜா என்ற இரு வாலிபர்களும் இலங்கை வங்கியின் பன்னிரண்டாவது மடியினுள் அனுமதியில்லாது நுழைந்ததாக கைதுசெய்யப்பட்டு கோட்டை நீதிமன்ற நீதவானால் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். ஆயினும் இவ்விரு இளைஞர்களுக்கும் பயங்கரவாதிகளுடன் சம்பந்தமிருப்பதாக இரகசியப் பொலிசார் தெரிவித்திருந்தனர் இதனையடுத்து இவ்விரு இளைஞர்களும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு இளைஞர்கள் பற்றிய விசாரணைகள் கடந்த 27-ம் திகதி கோட்டை நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு வோல்டர் ஜயவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது.

இரகசியப் பொலிசார் இவ்விரு இளைஞர்களான சந்தேக நபர்கள் சம்பந்தமாக விசாரணைகள் பூர்த்தியடைய வில்லை என்றும் இவர்கள் சம்பந்தமாக சட்டமா அதிபருக்கு தெரிவித்துள்ளதாகவும் இதுவரை அறிக்கை கிடைக்கவில்லையென்றும் நீதவானுக்கு தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதவான் சட்டமா திபரின் அறிக்கையை உடனடியாகப் பெறுமாறு இரகசிய பொலிசாருக்கு உத்தரவிட்டார் சந்தேக நபர்கள் இருவரும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்.

கொக்குவில் கிழக்கு கோணவளை வைரவர் சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது

மாலை 6 மணிக்குப் பூந்தண்டிகையில் வைரவர் சுவாமி வீதி வலம் வருவார்

பிரபல குருமார்கள் பிரதிஷ்டா குருமார்களாகக் கடமையாற்றுவார்கள்.

(ச)

## வடபகுதியில் எரிபொருள் விலைவிபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரு லீற்றர் சுப்பர் பெற்ரோல் 17 ரூபா 50சதமாகவும், போத்தல் 13 ரூபா 46 சதமாகவும், 1 லீற்றர் டீசல் 12ரூபாவாகவும், போத்தல் 9 ரூபா 23 சதமாகவும், ஒரு லீற்றர் மண்எண்ணை 10ரூபாவாகவும், போத்தல் 7 ரூபா 70 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலயங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் பெற்ரோல், டீசல், மண் எண்ணையில் கலப்படம் இருப்பின்பாவனையாளர்கள் தமது கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று எரிபொருள் விற்பனையாளர்சங்கம்கேட்டுள்ளது.

நியாயவிலையில் எரிபொருள் விற்பனைசெய்யப்படும் பட்சத்தில் தனியார் மினிபஸ்களில் அறவிடப்படும் கூடுதல் பணம் குறைக்கப்படலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. (வா)

### வசாவிளான்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உட்பட நால்வர் இருந்தனர். பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி ஆகிய இடங்களில் உள்ள கடைகளில் பால்மா வகை உணவுப் பொருள்களை கடைகளுக்குக் கொடுத்து விட்டு வசாவிளான் நோக்கி வந்துகொண்டிருந்தது பிற்பகல் 4-30 மணியளவில் தோலகட்டி பக்கம் லொறி வந்தபொழுது வசாவிளான் சந்தியில் நின்ற இராணுவத்தினர் சரமாரியாக அந்த லொறியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் இணுவிலைச் சேர்ந்த எஸ் சிவலிங்கம் (பில்கிளாக்) மூளைசிதறிய நிலையில் பலியானார் இவர் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாவார் மற்றும் காரைநகரைச் சேர்ந்த கே. நாதன் [18 வயது] என்பவர் காயத்துடன் தடபி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

லொறியின் சாரதியும் மற்றுமொருவரும் தப்பியோடி வீடுகளுக்குச் சென்றனர்.

வசாவிளான மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த ராணுவத்தினர் கடந்த வெள்ளிகிழமை வெளியேறி பலாலி முகாமுக்குச் சென்றது செரிநததே. மீண்டும் வசாவிளான் ஹோட்டலிலும் ஆலடிச் சந்தியிலும் இராணுவத்தினர் முகாமிட்ட சமயம போராளிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர். இதத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே நேரடிச் சமர் இடம்பெற்றது

நேற்றுப்பலாலி ஆசிரியப் பயிற்சிக கல்லூரிப் பக்கத்திலிருந்து ‘ஷெல்’ ஏவி விடப்பட்டது ஹெலிகொப்டர்களும் பறந்து ‘ஷெல்’, துப்பாக்கிப் பிரயாகம் மேற்கொண்டன போராளிகள் ஹெலிகொப்டரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

அவ்விடத்திலிருந்து சென்ற ஹெலிகொப்டர் ஆவரங்கால்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்கள் படுகாயமுற்றனர் மேலும் சிலர்காயமுற்று ஆஸ்பத்திரிளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ம]

## இரு சிங்கள நபர்கள் கொலை

(நமது நிருபர்)

லொறி ஒன்றில் பொருள்கள் ஏற்றிச்சென்ற இரு சிங்கள நபர்கள் இனந்தெரியாத நபர்களால் சுடடுக் கொல்லப்பட்டதுடன், அந்தலொறியும் சேதப்படுத்தப்பட்டுள்ளது

திருமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் வீதியில் சிற்றாறு என்னுமிடத்தில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

## இ.போ.ச.பஸ் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துகளின் பயணக் கட்டணம் இன்று. முதலாம் திகதி முதல அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து பின்வரும் இடங்களுக்கான புதிய கட்டண விபரம் வருமாறு:

முலலைத்தீவு ரூ22 50 மன்னார் ரூ 33 50, வவனியா ரூ 22 75, அநுராதபுரம் ரூ 31 25 பருத்தித்துறை ரூ 5 50, காரைநகர் ரூ 4 50, ஊர்காவற்றுறை ரூ 4.00, கீரிமலை ரூ4 50

இவை தவிர முள்ளைத்தீவு வவனியா கட்டணம் ரூ 11.50 ஆகவும், மன்னார் அநுராதபுரம் ரூ 17.50 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. [சி]

### அரச வைத்தியசாலை

கிளிநொச்சி, ஞாயிறு

இராமநாதபுரம், முரசுமோட்டை, பரந்தன்முதலான பகுதி மக்களின் வைத்திய வசதியை முன்னிட்டு முரசுமோட்டையில் புதிதாக அரசாங்க ஆஸ்பத்திரி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சம்பவங்களை அடுத்து மாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரி செயலிழந்ததைத் தொடர்ந்தே இந்த ஆஸ்பத்திரியை முரசுமோட்டையில் திறக்க சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்தனர்.

முரசுமோட்டையில் உள்ள விவசாய இலாகாவிற்குச் சொந்தமான கட்டிடமொன்றில் பிரஸ்தாப ஆஸ்பத்திரி திறக்கப்பட்டுள்ளது

ஆரம்பத்தில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவாக இது இயங்குமெனவும் காலப்போக்கில் இந்த ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கைது

[திருமலை நிருபர்]

திருமலையில் 6பொதுமக்களை ஊர்காவல்படையினர் கைது செய்துள்ளனர்.

நேறறு முன் தினம்இச்சம்பவம் இடமபெற்றது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு என்னநடந்தது என்று இதுவரை தெரியவில்லை.

ஆகிய இடங்களிலேயே 100 க்கு மேற்பட்ட வாலிபர்கள் இவ்விதமாக அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

### அடுத்த..

[1-ம பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை அரசு தமிழ்ப் போராளி ளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறுவதாயிருந்தால் இலங்கை சார்பில் அமைச்சர் மட்டத்திலான தூதர் குழுவொன்று இதில் கலநது கொள்ளாது என்றே எதிர் பார்க்கப்படுவதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது,

அத்துடன் தீவிரவாதிகள் வனமுறைகளைக் கைவிடாத வரையும் ஆயுதபாணிகளாயிருக்கும் வரையும் அரசாங்க அமைச்சர்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என சில அரசாங்க உறுப்பினர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்கட்கிழமை 1-9-86

கூட்டணி - அரசு பேச்சுக்கள்:

# கருத்து வேறுபாடுகளை நீக்க ஜனாதிபதி புதிய யோசனைகள்!

கொழும்பு. திங்கள்

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட அரசு - கூட்டணிப் பேச்சுக்களின்போது சில விடயங்களில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகளை நீக்கும்வகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன சில யோசனைகளை இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றிடம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனைகளையும் அதுபற்றிய தமது கருத்துக்களையும் டிக்ஸிற் இந்தியா அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று முடிவுற்ற கூட்டணி - அரசு பேச்சுக்களில் பல முக்கிய விடயங்களில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. குறிப்பாக இன, மொழி அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கம் குறித்து இரு தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது போன்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக மேலும் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டுமென்பதையும், இப்பேச்சுக்களின்போது, தமிழ்ப் போராளிக் குழுக்களை உள்ளடக்கிய இலங்கையின் பல்வேறு அரசியற் கட்சிகளினதும் கருத்துக்கள் பிரதிபலிக்கத் தக்கதாக ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்பதையும் கூட்டணியினரும், அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இதே வேளை, இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் நடைபெறுவதை கூட்டணியோ அரசாங்கமோ எதிர்க்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. இப் பேச்சுக்கான திகதி, தற்போது ஹராரேயிலுள்ள இந்தியப் பிரதர் ராஜீவ்காந்தி இந்தியா திரும்பியவுடன் நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இன்று

யாழ்ப்பாணம், திங்.

நல்லை ஆதீனத்தில் இன்று மாலை சங்கீத பூஷணம் திரு வி. சிவஞானசேகரம், பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துவார். (வா)

## நல்லூர் மகோற்சவ சமய அறிவு பண்ணிசை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தினையொட்டி யாழ்ப்பாண மாநகரசபை நடாத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு:- கீழ்ப்பிரிவு- முதலாம் பரிசு- ஜீ.சிவரஞ்சனி கொல்லங்கலட்டி, மதலலிப்பழை இரண்டாம் பரிசு- சு. கவிதாஜினி, அளவெட்டி வடக்கு மூன்றும் பரிசு- மா. நிமலதீபன் யாழ்ப்பாணம். நான்காம் பரிசு- அ. நந்தகுமார் யாழ்ப்பாணம். ஐந்தாம் பரிசு ச. ஜெயகலா, கொக்குவில் மேற்பிரிவு:- முதலாம்பரிசு சி. சிவநந்தினி, பன்னாலை, தெல்லிப்பழை. இரண்டாம் பரிசு- ஜீ சிவப்பிரியா, கொல்லங்கலட்டி. மூன்றும் பரிசு தா. கமலாம்பிகை நல்லூர் நான்காமிடம் [இருவர்] இ. சுபாதினி பன்னாலை பா. சாந்தா மல்லாகம் ஐந்தாமிடம்- வி. கௌரி, அளவெட்டி வடக்கு.

பெண்கள் முதலாமிடம் ப. சுஜாத்தா யாழ்ப்பாணம், இரண்டாமிடம் மு. ஜெயகௌரி கொல்லங்கலட்டி, மூன்றும் இடம் (இருவர்) தி. அமிர்தினி ஆனைக்கோட்டை, க. ஸ்ரீமனோகரி நல்லூர், நான்காமிடம் (இருவர்) ச. நளினி அம்பனை தெல்லிப்பழை, ந. பரிமளா வண்ணார்பண்ணை ஆண்கள் முதலாமிடம் வ. இராமேஸ்வரன் சிறுவிளான் இளவாலை, இரண்டாமிடம் இ. குகானந்தன் யாழ்ப்பாணம்.

## கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிளிநொச்சிமாவட்டச் செயலகம் மூலமாக தற்பொழுது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, இம்மாதம் தொடக்கம் கிராமிய வங்கிகள் மூலமாக ஓய்வூதியம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே ஓய்வூதியம் பெறுபவர்கள், தயவுசெய்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கீழ்காணும் கிராமியவங்கிகளொன்றில். சேமிப்புக்கணக்கொன்றினை ஆரம்பித்து, அச்சேமிப்புக்கணக்கு இலக்கத்தினையும், அக்கிராமியவங்கியின் பெயரினையும் செயலகக்கணக்காளருக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கக்கிராமியவங்கி, கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கக் கிராமியவங்கி, பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கக் கிராமிய வங்கி பளை, பூநகரி ப.நோ.கூ. சங்கக் கிராமியவங்கி.

## லொறியில் வந்த பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், திங்.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி கடந்த புதன் கிழமை பொருள்களுடன் வந்தயாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியத்தைச் சேர்ந்த 'கிளாஸ் ஹவுஸ்' நிறுவனத்திற்குச் சொந்தமான லொறியிலிருந்து ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத கோஷ்டியினரால் பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

இச் சம்பவம் புதுக்குடியிருப்புக்கும் விசுவமடுவுக்கும் இடையில் தேராவில் என்னுமிடத்தில் நடைபெற்றது. [சி]

## சட்டவிரோத சாராய-கசிப்பு விற்பனை தடை

வேலணை. ஞாயிறு

சட்டவிரோத சாராய விற்பனை. கசிப்பு விற்பனை ஆகியன இளைஞர் கோஷ்டிகளினால் வேலணைப் பகுதியில் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன

இத் தடைகளை மீறி சட்டவிரோதமாக சாராயம், கசிப்பு விற்பவர்களை கண்டுபிடித்தால் அவர்களுக்கு கடுந்தண்டனை வழங்கப்படுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## காரைநகரில் கம்பன் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் எதிர்வரும் 6ம் திகதி சனிக்கிழமையும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 'கம்பன் விழா' நடைபெறவுள்ளது.

ஈழத்தின் பிரபல பேச்சாளர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் பலர் பங்குபற்றும் இவ் விழாவில் பட்டிமன்றம், மேன்முறையீட்டு பட்டி மன்றம், கவியரங்கம் ஆகியன இடம்பெறும். (சி)

## ஈழம் தபால்தலை ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் குடாநாட்டிற்குள் நாம் நடத்தத் திட்டமிட்டிருக்கும் தபால் சேவையும் வெளியிடப்படவிருக்கும் ஈழம் தபால் தலைகள் பற்றியதுமான எமது அறிவிப்பு ஸ்ரீலங்கா இனவாத அரசை அரசியல் ரீதியில் பெரிதும் நெருக்கியுள்ளது. இதனால் ஸ்ரீலங்கா அரசு பதறி அடித்துக் கொண்டு மிகவும் பரிதாபகரமாகதனது வானொலியில் சட்ட நடவடிக்கைகள் பற்றியும் உளறிஉள்ளது.

குடாநாட்டிற்குள் நாம் ஈழம் தபால் தலைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதானது!-

இலங்கையின் குறிப்பிட்ட பகுதியில் ஸ்ரீலங்கா அரசு தனது ஆதிக்கத்தை இழந்து நிற்கிறது

அப்பகுதி ஈழப்போராளிகளின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கிறது

அப் பகுதியில் அவர்கள் ஒரு சுதந்திர அரசை நிறுவ முயலுகின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்னையானது, தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களில் அவர்கள் தமக்கென ஒரு சுதந்திர மக்கள் குடியரசை அமைத்து எமது எதிர்காலத்தை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் தமது முடிவை இலங்கையில ஒரு பகுதியில் அமுல் படுத்தி வருகின்ற அளவுக்கு எல்லைகடந்துவிட்டது.

இனிமேல் அமிர்தலிங்கத்தின் அரை குறைத் தீர்வுகள் செல்லுபடியாகாதவை என்ற வரலாற்று உண்மைகளை ஸ்ரீலங்காவில் வாழும் சிங்கள மக்களுக்கும் சர்வதேச அரங்கிலும் சொல்வதாக அமைந்துவிட்டது.

சிதைக்கப்பட்ட எமது தேசியப் பண்புகளை மறுக்கப்பட்ட எமது தேசிய உண்மைகளை உரிமைகளை விடாப்பிடியான போராட்டத்தின் மூலம் நிலைநிறுத்தித் தீருவோம். அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒவ்வொரு ஈழத்தின் பிரஜையும் பங்கு கொள்வதன் மூலம் ஈழப்போரை மக்கள் தழுவிய யுத்தமாக விஸ்தரிப்போம். எமது தேசிய உணர்வுகளின் தெளிப்பாடாக எமது தேசிய எழுச்சியின் அடையாளமாக ஈழம் தபால் தலைகளை உபயோகிப்போம்.

## மரண அறிவித்தல்

### திரு. அடைக்கலம்

(மலர்தேவி லொறி உரிமையாளர்)

இருபாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அடைக்கலம் என்பவர் 30-8 86ல் காலமாகிவிட்டார். இவர் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மினிதேவி, ஜெபநேசன் (சுவிஸ்), யோகநேசன் (சுவிஸ்), மலர்தேவி (H F C பாடசாலைமாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரிகைகள் 1-9-86 திங்கள் காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். [C 4350]

### திருஞானசம்பந்தக் குருக்கள் விக்கினேஸ்வர ஐயர்

ஆவரங்காலைச் சேர்ந்த விக்கினேஸ்வரஐயர் காலமானார். இவர் அனுராதபுரம் நுவரக்குழப் பிள்ளையார் கோவில் பிரதம குருக்களும். ஆதீன கர்த்தாவும், காலஞ் சென்ற திருஞானசம்பந்தக் குருக்கள் இரத்தினம்மாவின் அன்பு மகனும், குருசாமி ஐயர், சிவசாமிஐயர் [நீதிமன்றம், கலமுனை], பாஸ்கரமகாராசா (சவூதி), ஸ்ரீபதிஐயர், உலகமாதா இந்திராணி, மகாராணி [கச்சேரி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1-9-86 [இன்று] திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆவரங்கால் மயானத்தில் நடைபெறும்.

[C 4363]

### அருட்செல்வி. மேரி அல்பீனா [SR. ALBINA]

யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்செல்வி. மேரி அல்பீனா அவர்கள் 31-8-86 இல் இறைபதம் அடைந்துவிட்டார். அவரது இறுதிச் சடங்குகள் 1-9-86 அன்று பி ப 4 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி கொழும்பிலுள்ள ரோஸ் மீட் திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துற்காக யாவத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்'

மாகாணத்தலைவி,
திருக்குடும்ப மாகாண இல்லம்,
[C-4365] யாழ்ப்பாணம்.

## மன்னார் சூட்டுச்சம்பவம்: 4 சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

மன்னார்: ஞாயிறு

மன்னாரில் நேற்று இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தை யடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்த நால்வரினது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

எம் அருளானந்தம் (வயது 38 தாராபுரம்), எஸ். தில்லைச்சிவம் (வயது 25 - தாராபுரம்), என். நந்தகுமார் [வயது 22 பள்ளிமுனை] இவர்கள் மூவரும் மீன் பிடிக்கான ஐஸ் பெறுவதற்கு வானொன்றில் சென்று கொண்டிருக்கையில் ஸவுத் பார் என்னுமிடத்தில் சுட்டுக் கொல்லப்படடதுடன், அவர்கள் சென்ற வானும் தீக்கிரையாக்கப்பட்டது. மூவரினது சடலங்களும் வானுக்குள் பொசுங்கிய நிலையில் காணப்பட்டன.

ரவி மகாராஜா (வயது 26) இவர் யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி ஊடாக மன்னார் வந்து கொண்டிக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரியவருகிறது,

[வவ - நிருபர்]

## ரயில் முன் பாய்ந்து இளம் பெண் தற்கொலை

வவனியா, ஞாயிறு

வவனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்று கொண்டிருந்த யாழ்தேவி ரயிலின் முன் இளம் பெண் ஒருவர் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றது ரயில் அனுராதபுரம் ரயில் நிலையத்தைவிட்டுப் புறப்பட்டுச் சில நிமிட நேரத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றது அனுராதபுரத்துக் கருகாமையில் உள்ள பாலமொன்றின் மேல் ரயில் சென்று கொண்டிருக்கையில் இவ் விளம் பெண் ரயிலின் முன் பாய்ந்துள்ளார்.

இப் பெண்ணின் சடலம் உருக்குலைந்த நிலையில் இருப்பதனால் அடயாளம் காண முடியாமலுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [ஊ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.